சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 5	இதழ்: 09	பிப்ரவரி - 2024	விலை - ரூ.15/-
VOL:5	ISSUE: 09	FEBRUARY - 2024	Rs. 15/-



"தத்துவ ஞானி" ஜே. கிருஷ்ணமூர்த்தி!

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.550/- மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

அறிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, கும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, IDB நாடகள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"



* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.

* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு-5 மலர்-09 பிப்ரவரி - 2024

வெளியிடுபவர் / ஆசிரியர்

V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்

திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு

திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்

திருமதி. S.சாந்தி, சென்னை.

திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.

திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.

திரு. B.முருகன், சோழவந்தான்.

டாக்டர் செல்வி. S.சௌம்யா, ஊட்டி

இதழ் வடிவமைப்பு

சிகரம் பாலிகேஷன்ஸ்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்

எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி, அயனாவரம், சென்னை 600 023.

செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி



அன்பு குழந்தையே!

வாழ்க்கையில் கஷ்டங்கள் வந்து உன்னை ஸ்தம்பிக்க வைத்து விட்டதாக உணர்கிறாய், ஆனால் அது உன்னையும் உன் வாழ்க்கையையும் நல்ல திசையில் போக காரணமாய் இருந்தது என்பதை நீ உணர்ந்தாயா?

நீ போகும் பாதையில் முட்கள் உன்னை குத்தி வலி உண்டானது என நினைப்பது சரிதான். ஆனால் அந்த முட்கள் உன் கால்களில் குத்தா விட்டால் நீ மேலே பார்த்து கொண்டு நடப்பதை மாற்றியிருக்க மாட்டாய் அல்லவா? கீழே படுகுழியும் இருக்கலாம் என்று அச்சிறு முட்கள் மூலம் உனக்கு நான் காண்பித்தேன். நீயும் அதன் உட்கருத்து புரிந்துக்கொண்டாய்! நிச்சயம் நீ ஜெயிப்பாய்.

உனக்கு நான் வலியைக் கொடுப்பது உன்னுடைய அகமும், புறமும், பக்குவப்படத் தான், அது ஒரு நாளும் உன்னை துன்பப்படுத்துவதற்காக ஏற்படுத்தினது அல்ல. விரைவில் எல்லாம் சரியாகிவிடும் எதற்கும் அஞ்சாதே! உன்னோடும், உன் குடும்பத்தோடும் நான் இருக்கிறேன். நீ என் பரிபூரண அருளும், ஆசிர்வாதமும் அன்பும் பெற்ற பிள்ளை.

நீ ஜெயமாக, நல்ல ஆரோக்கியத்துடன் எல்லா செல்வ வளங்களைப் பெற்று சீரும் சிறப்புமாய் நல்ல பெயருடன் நிம்மதியான மகிழ்ச்சியான வாழ்க்கையை பெறுவாய்! கவலைப் படாதே, உன் அப்பா நானிருக்கிறேன்!

- பகவான் ஸ்ரீ சாயிபாபா

ஆசிரியர் பக்கம்...



அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

பகவான் சாயிநாதரின் அருளால் அறுபத்து ஏழாவது இதழ் மூலம் சாயி சொந்தங்களாகிய உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 07.01.24 ஞாயிற்றுக்கிழமை காலை10 மணிக்கு "சாய் தியானாலயா ஆத்மஞான பீடத்தில்" (17/7A, பழனியப்பா முதல் தெரு, அயனாவரம், சென்னை 23) மிகச்சிறப்பாக நடைபெற்றது.

காலை 8 மணிக்கு ஆசிரியரின் சத்சங்கத்துடன் தொடங்கிய விழா தியானம், பஜனை எனத்தொடர்ந்தது.

அடாது மழை பெய்து கொண்டிருந்தாலும், விடாது புத்தக வெளியீட்டு விழா தொடர்ந்தது. காலை பத்து மணிக்கு இம்மாத இதழை சேலத்தில் இருந்து வருகை தந்த அருமை அண்ணன் "பிரார்த்தனை செம்மல்" திரு.சாய்கலியன் அவர்கள் வெளியிட,சென்னை மகரஜோதி பவுண்டேஷன் திரு.முனுசாமி அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்கள்.

"சிம்மக்குரலோன்" திரு. சந்திரன் சாய்ராம், "சாயி காணக்குயில்"திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார் ஆகியோர் சாயி பஜனை பாடல்களைப்பாடினர். திரு. கலியன் சாய்ராம் அவர்கள் பக்தர்களிடம் சொற்பொழிவாற்றி அனைவருக்கும் பிரார்த்தனை





செய்தார்கள். திரு. கோபால் சாய்ராம்

திரு. நித்யானந்தம், ஆகியோர் பக்தர்களிடம் சாயி அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள். விழாவில், திரு. கோபால் சாய், திரு. நித்யானந்தம், திரு. சந்திரன், திருமதி.மாதங்கி பாலாஜி, திரு. சாய் சரவணன், திரு.கோவை தீபக், திரு.அகஸ்டின், திரு. அய்யாகண்ணு, திரு. இராஜசேகர், திரு. நாராயணன், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஏற்கனவே அறிவித்தபடி



ஆயுள் சந்தா உறுப்பினர் களுக்கான இலவச புனிதப் பயணத்திற்குண்டான குழுக்கல் நடத்தப்பட்டு அதிர்ஷ்டசாலி பயணியாக திரு.அந்தியூர் விஸ்வநாதன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும் 3 வருட சந்தாதாரர்களில் குலுக்கல் நடத்தப்பட்டு ரூ.1000 ரூபாய் மதிப்புள்ள பரிசை சென்னை, மாமாபழம் திருமதி. மீரா வெங்கடேசன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

1 வருட சந்தாதாரர்களில் சென்னை குரோம்பேட்டை திரு. வி. இராமநாதன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ. 500 மதிப்புள்ள பரிசை பெறுகிறார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் “பாராயணப் பகலவன்” திரு.சுந்தர் சாய்ராம் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சிறப்பான அன்னதானம் வழங்கப்பட்டது.

நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழ் 7 ஆம் ஆண்டை நோக்கி வெற்றிகரமாக வீர நடை போட்டுக் கொண்டிருக்கின்றது. வருகின்ற ஆகஸ்டு மாதம் நடக்க விருக்கின்ற 7வது ஆண்டு விழாவில் நமது இதழின் சந்தாதாரர்களில் 3 அதிர்ஷ்ட சாலிகளை, குழுக்களின் மூலம் தேர்ந்தெடுத்து ஒருவருக்கு இலவசமாக சீரடிக்குச் செல்லும் வாய்ப்பும், இருவருக்கு சிறப்பு பரிசுகளையும், சிறப்பு விருந்தினர்கள் முன்னிலையில் விழா மேடையில் பரிசளித்து கௌரவிக்க இருக்கின்றோம்.

நமது இதழை வாசிக்கும் அன்பர்கள்



அனைவரும் தவறாது இதழுக்கு சந்தா கட்டி இலவச சீரடிப்புனிதப்பயணத்தில் பங்குபெறும் வாய்பையும், பரிசுகளையும் பெற்று சாயிநாதரின் அருளைப் பெறவேண்டுமாய் அன்புடன் வேண்டுகின்றோம்.

பகவான் சாயிநாதரின் அருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று, உலக மாந்தர்கள் அனைவரும் போர், பகை, அச்சமின்றி ஆரோக்கியத்துடனும், மனநிம்மதியுடனும் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கிறோம். மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!**வாழ்க வளமுடன்!**

வாழ்க வையகம்!

– அன்புடன் ஆசிரியர்

ஓம் சாய்ராம்

வாழ்வை வளமாக்கும் இனிய சாயி லிகித ஜபம்

சாய் அன்பர்களுக்கு பணிவான வணக்கத்துடன்...

ப்ரபஞ்சத்தின் ஆற்றல்மிக்க சக்தி ஸ்வரூபனான நம் அன்பு சாய் மஹராஜ் க்ருபையினால் நமக்கு அளிக்கப்பட்ட திரு மந்த்ரமான,

"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்" என்ற

சக்தி வாய்ந்த லிகித நாம ஜபம் தினமும் 108 முறை யாவது மனம் ஒன்றி எழுதி நமது கர்ம வினைகளின் தாக்கத்தில் இருந்து, தற்காப்பு செய்து கொள்வதுடன், நமது அனைத்து காரியங்களிலும், பேரொளியாய் சாய்நாதர் வழி காட்டி, பரிபூரணமாய் நம்மை ஆசீர்வதிக்க ப்ரார்த்திப்போம் வாரீர்.



'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'

தொடர்புக்கு;

சுந்தர்சாய், செல்: 9789404451

தொடர் –67

குருவைத் தேடி

சீரடியில் இருந்து வந்து, சில மணிநேரம் கூட என்னால் வீட்டில் இருக்க முடியாமல் உடனடியாக திரும்ப சீரடிக்குச் செல்லவேண்டும் என்று என்னை எது முடிவெடுக்க வைத்தது. என் அப்போதைய நிலையா? அல்லது பூர்வ சென்ம பலனா? இல்லை சற்குருவின் மகிமையா?

இதிலென்ன சந்தேகம். சற்குருவின் மகிமைதான். சற்குருவின் மகிமைக்கு முன், சென்ம, சென்மமாய் தொடர்ந்து வரும் கர்ம பலன்கள் எம்மாத்திரம். சாஸ்திர சம்பிரதாயங்கள்தான் எம்மாத்திரம். புனித யாத்திரையும், புனித நீராடலும் எம்மாத்திரம். பூஜை, புனஸ்காரங்கள், பஜனை, பாராயணம், மந்திர,தந்திரங்கள்தான் எம்மாத்திரம்.

சற்குருவின் மகிமைகளை வேதங்களே விளக்கத் தடுமாறி நிற்கும் போது நான் எங்கனம் சொல்லால் விளக்குவேன். சற்குருவே! உன்மேல் கொண்ட காதல்தான் உன்னைப்பிரிய மனமில்லாமல் மீண்டும் உன்னைக் காண ஓடிவந்தது என்பதை நான் நன்கறிவேன்.

நான் உன்னிடம் தேடிவந்ததுதான் என்ன? பொன்னா? பொருளா? நிம்மதியா? ஞானமா? எதைத் தேடிவந்தேன் என்பதைச் சொல்ல எனக்கு கூச்சமாக இருக்கிறது. நீ எனக்கு எதைக் கொடுத்தாய் என்பதை நினைக்கையில் வியப்பாய் அல்லவா இருக்கிறது.



பையினிலே பொருளை வைத்துக் கொண்டு உன் தேவை என்னவென்று தெரிந்தும், தீர்க்க திராணியற்ற

"ஹாஜி" யாகவல்லவா நான் வாழ்ந்திருக்கின்றேன். ஓஞ் என் சற்குருவே!

புறத்தில் நடப்பவற்றை எல்லாம் கண்டு ரசித்து, தான் விரும்பியதை எல்லாம் அடைய வேண்டும்

என்று மனம் ஒவ்வொரு கணமும் போராடுகிறது. இந்த முடிவில்லா போராட்டம், ஒரு வீண்முயற்சி என்று புரிந்து கொண்டு, உன் முயற்சியை எப்பொழுது முழுமையாக கை விடுகிறாயோ அது தான் ஞானம் என்பதை புரியவைத்த மெய்ஞானியே!

நம் மனதில் தோன்றும் இன்ப, துன்பங்கள் உயர்வு தாழ்வுகள் அனைத்தும், "எல்லாம் அவன் செயல்" என்ற அறிவின் புரிதல் வரும்வரை சரணாகதி வருவதில்லை. சதா மகிழ்ச்சியையும், நிம்மதியையும், தேடி கொண்டு இருந்த என் அறிவு, உன்னை எப்போது தரிசித்தேனோ அந்த கணமே தன் தேடுதலை நிறுத்தி விட்டது.

இனி என் அறிவு நிச்சயமாய் தேடுதலை தொடராது. தேடியவை குறையின்றி முழுமையாய் கிடைத்த பின் தேடுவது மடமையன்றோ! எனவே கிடைத்ததற்கரிய பெரும்பொருளைப் பற்றினேன், இறுகப்பற்றினேன், பற்றற்றுப் பற்றினேன். இனி உனைத்தவிர வேறொன்றில் பற்றில்லை பரம் பொருளே!

ஒருவழியாக மறுநாள் காலை யில் மீண்டும் சீரடிக்கு வந்து சேர்ந்தேன். தூரத்தில் இருந்து ஆலய கோபுரத்தைப்பார்த்தும், நடு ரோட்டில் நின்றே தலைக்குமேல் கைகளைக் குவித்து என்னை மன்னித்துக்கொள் குருதேவா! உன்னிடம் சொல்லாமல் சென்று விட்டேன்.இனி உன்னிடம் சொல்லா மல் இங்கிருந்து ஒரு அடி கூட எடுத்து வைக்க மாட்டேன் என்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டேன்.

பிறகு, எப்பொழுதும் அமரும் இடத்திற்குச் செல்லலாம் என்று நடக்க ஆரம்பித்தேன். எங்கு பார்த்தாலும் மனிதர்களின் தலை. நிற்கக்கூட இடமில்லாதபடிக்கு எக்கச்சக்கமான கூட்டம். அன்று ஹோலிப்பண்டிகை என்பதை பின்னால் தெரிந்து கொண்டேன். எப்படியோ கூட்டத்திற்குள் நுழைந்து நான் எப்பொழுதும் அமர்ந்திருக்கும் இடத்திற்கு வந்து பார்த்தால் அங்கு ஒரு அங்குலம்கூட இடமில்லாமல் பக்தர்களால் நிறைந்திருந்தது.

ஆனால் அங்கே எனக்கு ஓர் ஆச்சர்யம் காத்திருந்தது. நான் புனேவில் இருந்து நடந்து வரும்போது எனக்கு பணம் தரவேண்டிய வியாபாரி, வேண்டும் என்றே எனது தொலைபேசி அழைப்பை தவிர்தாரே, அவர் குடும்பத்துடன் அங்கே நின்றிருந்தார்.

என்னைப் பார்த்ததும் அவராகவே ஓடிவந்து என்னிடம் நலம் விசாரித்து விட்டு, நான் கேட்பதற்கு முன்பாகவே, இரண்டாயிரம் ரூபாய் பணத்தை என் கைகளில் திணித்துவிட்டு, இன்னும் இரண்டு நாட்களில் இதே இடத்திற்கு வந்து மீதித் தொகை தருகிறேன் என்று கூறிவிட்டு தன் குடும்பத்தைக் கூட்டிக் கொண்டு அங்கிருந்து வேகவேகமாகச் சென்றுவிட்டார்.

எனக்கு அவரிடம் இருந்து வரவேண்டியது லட்சரூபாய்க்கு மேல் ஆனால் அந்த சமயத்தில் என் கைகளுக்கு இரண்டாயிரம் ரூபாய் வந்ததையே என் மனம் பெரிதாக எடுத்துக்கொண்டது. அப்போது என் கைகளில் இரயில் பயணச்சீட்டு வாங்கியது போக 400 ரூபாய்தான் மிச்சமிருந்தது. அப்போது வந்த பணத்தையும் வைத்துக்கொண்டு இன்னும் ஒரு வாரம் சீரடியில் தங்க முடியும் என்று மனம் ஆனந்தப்பட்டது.

எனவே அங்கு நடந்ததை நான் வேடிக்கை மட்டுமே பார்த்தேன்.



அவரிடம் நான் எதையுமே பேசவில்லை. அந்த வியாபாரி சொன்னபடி இரண்டு நாளில் வந்து பணம் கொடுத்தாலும் சரி, கொடுக்கா விட்டாலும் சரி எனக்கு அதைப்பற்றி கவலை இல்லை. ஏனெனில் நான் இனி எதையுமே தேடப்போவதில்லை. வருவதை மட்டுமே ஏற்றுக்கொள்ளப் போகிறேன்.

கடந்த பத்து நாட்களில் என் சாயிதேவர் என்னை பலவாறாக மாற்றியிருக்கின்றார். சாயி எப்பொழு தும் பிரட்சனைகளில் இருந்து நம்மை அப்படியே தூக்கி காப்பாற்றமாட்டார். பிரட்சனையை அனுபவிக்கவைத்து அதில் இருந்து வெளியே வருவது எப்படி என்று கற்றுத்தருவார்.

யோசித்துக்கொண்டே அங்கு அமருவதற்கு இடம் தேடினேன். காவல்காரர்கள் அங்கு அமரக் கூடாது என்று விரட்டி னார்கள். காலை பத்து மணிவரை அங்கேயே சுற்றிக் கொண்டிருந்தேன். வயிறு பசிக்க ஆரம்பித்தது. பிரசாதாலயா செல்லலாம் என்று மெயின் ரோட்டிற்கு வந்தபோதுதான் அங்கே என்னுடன் ஏற்கனவே இருந்த பைரவரைக் கண்டேன்.

என்னைப்பார்த்ததும் பைரவர் என்னிடம் வரவில்லை. மாறாக புனே செல்லும் சாலையில் நடக்க ஆரம்பித்தது. பைரவரைப் பார்த்ததும் எனக்குள் ஏதோ நிகழ்ந்தது. எதையும் யோசிக்காமல் அதன் பின்னாலேயே நடக்க ஆரம்பித்தேன்.

பைரவர் கூட்ட நெரிசலுக்குள் புகுந்து கந்தோபா கோவிலைத் தாண்டி நடந்து கொண்டிருந்தார். மெயின் ரோடு, பகல் வேளை என்பதால் நானும் அவரின் பின்னால் நடந்து கொண்டே இருந்தேன். சிறிதுதூரம் சென்றதும் சாய் பக்த நிவாஸ் என்ற பக்தர்கள் தங்கும் விடுதி கண்ணில் பட்டது. பைரவர் அதற்குள் விடுவிடுவென புகுந்து வரவேற்பறைக்குள் சென்று ஐந்தாவது கவுண்டருக்கு எதிரில் படுத்துக்கொண்டது.

அங்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் தங்கும் அறை வேண்டி வரிசையில் நின்று கொண்டிருக்கின்றனர். எனக்கு உள்ளே நுழைந்ததும் என்ன செய்வது என்றே தெரியவில்லை. சற்று தூரத்தில் சிலர் ஏதோ விண்ணப்பத் தை பூர்த்தி செய்து கொண்டிருந்தனர். அது அறையை பதிவு செய்வதற்கான விண்ணப்பம். நானும் அதில் ஒரு விண்ணப்பத்தை எடுத்து பூர்த்தி செய்துவிட்டு நின்று கொண்டிருந்தேன்.

அறை முன்பதிவு செய்யும் கவண்டர்கள் அங்கு ஐந்து இருந்தது.

அதில் நான்கில் நிறைய பக்தர்கள் நெடு நேரமாக நின்று கொண்டிருந் தார்கள். இதில் நமக்கு எங்கே அறை கிடைக்கப் போகிறது என்ற சந்தேகத்துடன் பைரவர் படுத்திருந்த ஐந்தாவது கவுண்டரில் போய் நின்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

சட்டென்று ஐந்தாவது கவுண்டர் மட்டும் திறந்தது. முதலில் நின்றிருந்த நான் உடனே விண்ணப்பத்தை நீட்ட, அதிகாரி உடனடியாக நானூறு ரூபாய் வாங்கிக்கொண்டு இரண்டு நாட்களுக்கு அறை ஒதுக்கிக் கொடுத்தார். சாவியை பெற்றுக் கொண்டு என்னால் வெளியே வர முடியாதபடி கூட்டம் முண்டியடித்தது.

ஒருவழியாக வெளியே வந்து, பைரவரை தேடினேன். பைரவரைக் காணோம். சரி என்று எனக்கு ஒதுக்கப்பட்ட அறைக்குச் சென்றேன். பயணக்களைப்பு போக குளித்துவிட்டு சற்று ஓய்வெடுக்கலாம் என்று கட்டிலில் படுத்தேன். முதுகில் ஏதோ உறுத்த எழுந்து போர்வையை விலக்கிப் பார்த்தேன். அது உபாசினி மகராஜ் பற்றிய ஒரு தமிழ் புத்தகம்.

இது எப்படி இங்கு வந்தது. ஏற்கனவே தங்கியிருந்தவர்கள் விட்டுச் சென்று விட்டார்களா? அதுவும் தமிழ் புத்தகம். ஆர்வமாக புத்தகத்தை புரட்ட ஆரம்பித்தேன். படிக்கப்படிக்க, உபாசினி சரிதம் என்னை ஈர்த்தது. கோவிலுக்குச் செல்லவேண்டும் என்ற எண்ணம் சிறிதும் இல்லாது தொடர்ந்து மிக சுவாரஸ்யமாக படித்துக் கொண்டிருந்தேன்.

பல்வேறு சோதனைகளுக்கி டையே உபாசினி மகராஜ் சீரடிக்கு வந்ததும், பாபா அவரை நான்கு ஆண்டுகள் "சும்மாயிரு" என்று கட்டளையிட்டதை படித்துக் கொண்டிருந்த போது எனது அறைக்கதவு தட்டப்பட்டது.

நான் கதவைத் திறந்து பார்த்தேன். வெளியில் பாபாவைப் போன்றே உடையணிந்த ஓர் இளைஞன் நின்றிருந்தார். பார்ப்பதற்கு தமிழர் போன்று இருந்தார். நான் அவரிடம் என்ன சுவாமி? என்ன வேண்டும்? என்று தமிழில் கேட்டேன். அவர் என்னைப் பார்த்து புன்னகைத்துவிட்டு, நீ கைகளில் வைத்திருக்கும் புத்தகம் தான் வேண்டும் என்றார் தமிழில்.

அவரே தொடர்ந்து, அது எனது புத்தகம்தான் இன்று காலையில்தான் அறையை காலி செய்தேன் மறந்து வைத்துவிட்டேன். நீ புத்தகத்தை படிக்கின்றாய் போலிருக்கிறதே என்றார். ஆமாம் சுவாமி கொஞ்சம் படித்தேன். இந்தாருங்கள் என்று அவரிடம் புத்தகத்தை நீட்டினேன்.

அவர் என்னிடம் புத்தகத்தை வாங்கிக்கொண்டு எது வரை படித்திருக்கின்றாய் என்று கேட்டார். நான் பாபா, உபாசினியை "நான்கு வருடங்கள் சும்மாயிரு" என்று கூறுவதுவரை படித்திருக்கின்றேன் என்றேன். அவர் உடனே என்னைப் பார்த்து சத்தமாக சிரித்துவிட்டு, "அது உனக்கும் தான்" என்று கூறிவிட்டு வேகமாக சென்றுவிட்டார்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. அது எப்படி நான்கு ஆண்டுகள் சும்மா இருப்பது. இந்த உபாசினி மகராஜ் சும்மா இருந்தாரா? இல்லையா? அதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டுமே! புத்தகத்தை வேறு வாங்கிச் சென்றுவிட்டாரே என்றவாறே அறைக்கு வெளியே சென்று சுற்றும் முற்றும் பார்த்தேன். அவர் வந்து சென்றதற்குண்டான அறிகுறியே இல்லை.



மீண்டும் அறைக்குச் சென்று சிறிது நேரம் ஓய்வெடுத்துக்கொண்டேன். மாலையில் பாபாவை தரிசிக்க ஆலயத்திற்குச் சென்றேன். கூட்டம் அலைமோதியது. பாபாவிடம் செல்வதற்கு இரண்டு மணிநேரம் ஆனது. பாபாவை தரிசித்துவிட்டு திரும்பும்போது கூட்டத்தோடு கூட்டமாக அறைக்கு வந்த சுவாமி நின்றிருந்தார்.

நான் அவரைப் பார்த்ததும், அவரும் என்னைப்பார்த்தார். சற்றே புன்சிரிப்போடு கைகளை உயர்த்தி நான்கு விரல்களை மட்டும் காட்டினார். நான்கு வருடங்களை ஞாபகப்படுத்துகிறாரோ என்று நினைப்பதற்குள் கூட்டம் என்னை தள்ளிக்கொண்டு வெளியே கொண்டுவந்து விட்டது.

நான் வெளியே வந்துவிட்டேன். மனம் சற்று தெளிவாக இருந்தது. கால் போன போக்கில் நடந்தேன். சீரடியில் உள்ள சின்ன, சின்ன தெருக்கள், காய்கறிச் சந்தை, அப்போது கட்டப்பட்டுக் கொண்டிருந்த சாய் ஆஸ்ரமம், அதன் அருகில் உள்ள சாய்ராம் உயர்நிலைப்பள்ளி, மருத்துவமனை என அனைத்தையும் சுற்றி வந்தேன்.

இரவு அறைக்கு வந்து படுத்த போது உறக்கம் வரவில்லை. மனம் புதிதாக ஒரு திட்டம் போட் டது. எனக்கோ சீரடியை விட்டுப் போக மனமில்லை. சீரடியில் எல்லா வசதியும் இருக்கின்றது. குழந்தைகளுக்கு படிக்க சாய் சனஸ்தானின் உயர் நிலைப் பள்ளியும் இருக்கிறது. நாமும் சாயிநாதரின் அருகிலேயே இருந்து விடலாம் என்று மனம் கணக்குப் போட்டது.

இங்கு ஏராளமான தமிழர்கள் வருகின்றார்கள். ஆனால் தமிழ்நாட்டு உணவு கிடைக்காமல் தடுமாறுகிறார்கள். நாம் ஏன் சீரடிக்கே குடும்பத்துடன் வந்துவிடக்கூடாது. பிழைப்பதற்கு ஒரு தமிழ்நாட்டு உணவகம் ஆரம்பித்துக்கொண்டால் போயிற்று என்றவாறு விடியும் வரை சிந்தித்துக்கொண்டிருந்தேன்.

இரண்டு நாளில் எனது வியாபாரி வந்து பணம் தருகிறேன் என்று கூறிச்சென்றாரே, அவர் வரட்டும் அவரிடமே உதவி கேட்கலாம். அவர் சீரடிக்கு அருகில் உள்ள ஸ்ரீராம்பூர் என்ற ஊரில்தான் வசிக்கின்றார் என்று முடிவெடுத்துக் கொண்டு, மணியைப் பார்த்தேன். காலை முன்று எழுந்து குளித்துவிட்டு, காலை ஆரத்திக்குச் சென்றேன்.அதிகாலை யில் சீக்கிரமாகச் சென்றதால் பாபாவின் முன்னால் அமர்ந்து காலை ஆரத்தியை பார்க்கும் பாக்கியம் கிட்டியது. அதுவே எனக்கு நல்ல சகுணமாகத் தெரிந்தது. நாம் சீரடிக்கே வந்துவிடலாம் என்ற நம்பிக்கை பிறந்தது.

தரிசனம் முடித்து வெளியே வந்து காலையில் இருந்து வியாபாரிக்காக காத்திருக்க ஆரம்பித்தேன். பகல் பொழுது போய் மாலை வந்தது. நான் எதிர்பார்த்தது போலவே, இரவு ஏழு மணிக்கு வியாபாரி வந்தார். வந்தவர், தயவு செய்து கோபித்துக் கொள்ள வேண்டாம். நானும் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தேன்.பணம் ஒன்றும் கிடைக்கவில்லை. நீங்கள் ஊருக்குச் செல்லுங்கள். நான் கண்டிப்பாக அடுத்த சீசனில் உங்கள் பணத்தை கொடுத்துவிடுகிறேன் என்று கூறினார்

நான் அவரின் கைகளைப்பற்றிக் கொண்டு, பரவாயில்லை. நீங்கள் பணத்தை எப்போது வேண்டு மானாலும் கொடுங்கள். இப்போது எனக்கு ஒரு உதவி செய்யுங்கள். நான் குடும்பத்துடன் சீரடிக்கு வந்துவிடலாம் என்று நினைக்கின்றேன். எனக்கு சீரடியிலோ, அல்லது அருகிலோ ஒரு வீடு வாடகைக்கு ஏற்பாடு செய்யுங்கள். அப்படியே தமிழ்நாட்டு உணவகம் வைப்பதற்கு ஒரு கடையும் பார்த்துக் கொடுங்கள் என்று கேட்டேன்.

வியாபாரி கொஞ்சமும் தாம தித்காமல், அவ்வளவுதானே! ஏற்பாடு செய்து விடலாம். நீங்கள் கவலைப் படாதீர்கள். என்று ஆறுதல் கூறினார். அவரை அனுப்பிவைத்துவிட்டு, அறைக்கு வந்து படுத்தேன். மனம் நிம்மதியாக இருந்தது. வெகு நாட்களுக்குப் பின்பு அன்று நான் நிம்மதியாக உறங்கினேன்.

காலையில் எழுந்து மீண்டும் பாபாவை தரிசித்தேன். தங்கும் அறை இரண்டு நாட்களுக்குத்தான். அன்று காலை நான் அறையை காலிசெய்ய வேண்டும். அறையை இன்னும் இரண்டு நாட்களுக்கு தருவார்களா என்ற சந்தேகத்துடன் கவுண்டருக்குச் சென்று ரசீதையும் சாவியையும் கொடுத்தேன். அதிகாரி என்ன நினைத்தாரோ, நானூறு ரூபாய் கொடுங்கள் என்று கேட்டார்.

நானும் அறை வாடகை பாக்கி போலிருக்கின்றது என்று எடுத்துக் கொடுத்தேன். அவர் அறையை இன்னும் இரண்டு நாட்களுக்கு அதிகரித்து சாவியை மீண்டும் என்னி டமே கொடுத்தார். மனம் மிகவும் ஆனந்தமயமாகிவிட்டது. சாயி எனக்கு அனுகிரகம் செய்துவிட்டார். இனி எல்லாம் நல்லதாகவே நடக்கப் போகின்றது. இனி ஒரு குறையும் இல்லை. என்றவாறே மீண்டும் ஆலயத்திற்குச் சென்று சாயியை தரிசித்தேன்.

இப்படியே ஆனந்தமாக அடுத்த நாளும் கழிந்தது. நாளையுடன் அறையின் தங்கும் காலம் முடிந்தது. நாளை வேறு எங்காவது அறை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்துக் கொண்டு நிம்மதியாக உறங்கினேன்.

அதிகாலை எழுந்து எப்பொழுதும் போல் காலை ஆரத்திக்குச் சென்று சாயிநாதரை கண்ணாரக்கண்டு தரிசித்து வணங்கினேன். வெளியே வரும் போது உதி கவுண்டரில் உதி கொடுப்பவர் ஒரு உதி பாக்கெட் கொடுத்தார். நான் அதை வாங்கிக்கொண்டு கண்களில் ஒத்திக்கொண்டதும் என்னை மீண்டும் அழைத்து இன்னுமொரு உதி பாக்கெட்டைக் கொடுத்து “ சலோ” என்றார்.

நான் வெளியே வரவும், என் அறைக்கு வந்த சாமியார் என் எதிரே வரவும் சரியாக இருந்தது. நான்



அவரைப் பார்த்து வணக்கம் சொன்னேன். பதில் வணக்கம் சொன்னவர். அவரின் பையினில் இருந்து ஒரு பொட்டலத்தை எடுத்து என்னிடம் கொடுத்தார். நான் அதைப் பிரித்துப் பார்த்தேன். அதில் நிறைய உதி இருந்தது.

இது என்ன என்றேன். இதுவும் உதிதான். பாபாவின் உதி. பத்திரமாக வைத்துக்கொள். அடுத்த நான்கு வருடத்திற்கு இதுதான் உனக்கு பாதுகாப்பு. நீ இன்று உனது ஊருக்குப் புறப்படலாம். நான்கு வருடத்திற்குப் பின்பு சந்திக்கலாம். உனக்காக நான் காத்திருப்பேன் என்றவர் விடு விடுவென நடந்து போய்விட்டார்.

நான் உதியை கையில் வைத்துக் கொண்டு திரும்பி பாபாவின் சந்நிதியைப் பார்க்கிறேன். உதி பாக்கெட் கொடுத்தவரும் ஒன்றுக்கு, இரண்டு பாக்கெட்டாக கொடுத்து

"சலோ" என்றாறே! அப்படியானால் என்ன அர்த்தம். எனக்கு சத்சரிதத்தில் படித்தது ஞாபகத்திற்கு வந்தது. பாபா என்னை ஊருக்கு போக அனுமதியளிக்கின்றார். நான்கு வருடங்கள், "ஏது நடந்தினும் எனக்கேன் என்றிரு மனமே" என்று உபதேசிக்கின்றார். "என் வேலையை நீ பார், உன்னை நான் பார்த்துக் கொள்கிறேன் என்கிறார்".

அவரது வேலை என்ன? அவருக்கு அப்படி என்னதான் வேலை இருக்கிறது. அப்படியே இருந்தால் அதை நாம் செய்யும் அளவிற்கு நமக்கு பாபாவை விட அதிக சக்தி இருக்கிறதா என்ன? அவர் வேலை எதுவும் இல்லை. சதா சர்வகாலமும் அவரது நாமத்தை நினைப்பதுவே வேலை.

ஆக, நான் ஆசைப்பட்டது போல் சீரடிக்கே வந்துவிடுவது என்பது நடவாத காரியம் என்பது உடனடியாக எனக்கு புரிந்துபோனது. தேடுதல் நின்றுபோன பின்பு வருவதை மட்டும் அல்லவா ஏற்றுக் கொள்ளவேண்டும் நான் உடனடியாக அந்த நிமிடத்தில் நடந்ததை புரிந்து கொண்டு ஏற்றுக் கொண்டேன். நின்ற இடத்தில் இருந்து கைகளை தலைக்கு மேல் உயர்த்தி பகவானே! பரம் பொருளே! உணர்ந்துகொண்டேன்.

சுவாமி!நீ இருக்கிறாய். எங்கும் நிறைந்திருக்கிறாய். என்னை வழி நடத்தும் பொறுப்பை நீ ஏற்றிருக்கிறாய் என்பதை நன்கு உணர்கிறேன். இதோ உனது உத்தரவிற்கு கீழ்படுகிறேன். இனி என் வாழ்க்கையில் நானாக எந்த முடிவும் எடுக்கமாட்டேன் "எல்லாம் உன் செயல்"

கிடுகிடுவென அறைக்கு வந்து அறையை காலி செய்துகொண்டு, பேரூந்தைப் பிடித்து புனே வந்து

சேர்ந்தேன். மாலையில் சென்னை எக்ஸ்பிரசில் டிக்கெட் எடுத்துக் கொண்டு கிடைத்த இடத்தில் அமர்ந்து கொண்டேன். இரயிலில் கூட்டம் அலைமோதியது. கசகச வென்று பேசிக்கொண்டும், சண்டை யிட்டுக் கொண்டும், பயணிகள் பயணித்துக் கொண்டிருந்தனர்.

ஆனால் என் மனம் அமைதியாக இருந்தது. சுற்றியிருப்பவர்களின் கூச்சலும், குழப்பமும் என்னை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை. எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. எப்படி இது. என் பிரட்சனைகள் எதுவும் இன்னும் தீர்ந்துவிடவில்லையே. ஆனாலும் பத்து நாட்களுக்கு முன்பு இருந்த பதட்டம் இன்று என்னிடம் இல்லை.

அதற்கு காரணம். நான் வெளி உலகை கவனித்துக் கொண்டிருந்தது தான் என்பதை உணர்ந்தேன். இப்போது நான் என்னை மட்டுமே கவனித்துக் கொண்டிருந்தேன். மனம் சாய்ராம், சாய்ராம் என்று தெளிவாய் கூறிக்கொண்டிருந்தது.

பாபா கூறிய நான்கு வருடம் "சும்மா யிரு" அந்த இரயில் பயணத்தில் இருந்து தொடங்கியதாக நம்புகிறேன். ஆம் நான் சும்மாயிருக்கத் தொடங்கினேன். இரயில் "சும்மாயில்லாமல்" ஓடிக்கொண்டே இருந்தது. சீரடியில் சென்று தங்கிவிட வேண்டும் என்ற எண்ணத்தை மாற்றிக் கொண்டு, நான்கு ஆண்டுகள் "சும்மாயிரு" என்பதை பாபாவின் வேதவாக்காக எடுத்துக்கொண்டு சென்னை வந்து நான்கு ஆண்டுகள் "சும்மா" இருந்ததோடு பெரும்பாலும் மவுனமாக இருக்க ஆரம்பித்தேன்.

அந்த நான்கு ஆண்டுகளும், ஒவ்வொரு விநாடியும், சாயி எனக்கு அளவில்லாத அனுபவங்களை வழங்கிக்கொண்டே இருந்தார். நான் பல்வேறு குருநாதர்களிடம் "படித்த" வித்தைகளை "அனுபவமாக" உணர வைத்தார்.

காலம் கனிந்தது. நான்கு ஆண்டுகள் நிறைவடைந்தது. சாயி நாதரின் உத்தரவின்படி, சென்னை அயனாவரத்தில், சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம் தொடங்கப்பட்டு, சாயி சேவா, அன்னதானம், யோகா, தியானம், சத்சங்கம் எனத்தொடர்ந்து, அதன் தொடர்ச்சியாக ஏழு ஆண்டு களுக்கு முன்பு கலியுகத்தின் கண்கண்ட தெய்வம், சாயிநாதரின் ஆசியுடன் "சாய் மகராஜ் குருவை தேடி" என்ற மாத இதழையும் தொடங்கி அதில் ஓர் கடைநிலை ஊழியனாக பணிபுரிந்து வருவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

எனது சற்குருவாக நான் அடைந்த சாயிநாதரை, பகவான் சாயிநாதராக அறிந்து கொண்ட அந்த நான்கு ஆண்டுகால அனுபவங்களை, பகவான் சாயிநாதர் அனுமதித்தால், பிற்பாடு தொடர்கிறேன்.

என் அன்பிற்கினிய சாயி சொந்தங்களே! எனது "குருவை தேடி" தேடுதல் இத்துடன் முடிகிறது. இதுவரை எனது தேடுதலை கவனத் துடன் கூர்ந்து படித்து என்னை ஊக்குவித்த அனைத்து சாயி பக்தர் களுக்கும் எனது பணிவான நன்றியினை உங்களது பாதத்தில் சமர்ப்பித்து, எனக்கு எல்லாமுமான பகவான் சாயிநாதருக்கும், எனது நிழலாக இருந்து என்னோடு பயணித்துவரும் எனது அன்பு மனைவிக்கும், குழந்தைகளுக்கும் நன்றி கூறி நிறைவு செய்கிறேன்.

குரு வாழ்க!

குருவே துணை!

நிறைவு பெற்றது.

சாய் தியானாலயாவில் "சாயி லீலா"



– ஜெயந்தி ஸ்ரீராம்

ஒருமுறை சகோதரி புவனா என்பவர் எங்களது சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்திற்கு கல்பனா என்ற சகோதரியை கூட்டிவந்தார். உள்ளே நுழைந்ததும் கூடத்தில் வைக்கப்பட்டு இருந்த எட்டடி உயர சாய்பாபாவின் படத்தைப் பார்த்து உணர்ச்சிவயப்பட்டு வியந்து நின்றுவிட்டார்.

அவரை ஆசுவாசப்படுத்தி சகோதரி புவனா அவர்கள் உள்ளே அழைத்து வந்து குருவிடம் அறிமுகப்படுத்தி வைத்தார்கள். அவர்களை அன்போடு வரவேற்ற குரு அவர்கள் ஏன் பாபாவைப் பார்த்து வியந்து நின்றுவிட்டீர்கள் என்று கேள்வி கேட்க,

அதற்கு அந்த சகோதரி, நான் இதற்குமுன் இவ்வளவு பெரிய படத்தில் பாபாவை பார்த்தில்லை. தவிர கடந்த ஐந்து ஆண்டுகளாக என் வாழ்க்கையில் நடைபெற்ற அனைத்து சிக்கல்களில் இருந்தும் என் குடும்பத்தை காப்பாற்றி மீட்டுக் கொண்டுவந்தவர் இவர்தான் என்று யாரோ என் கன்னத்தில் அறைந்து சொன்னதுபோல் இருந்தது. அதனால் சற்று உணர்ச்சிவசப்பட்டுவிட்டேன். ஆனால் இப்போது நான் இவரை பரிபூரணமாக நம்புகிறேன் என்றாள் கண்ணீர் மல்க.

தொடர்ந்து அவள் தன் கதையை குருவிடம் கூறினாள், கடந்த ஐந்து ஆண்டுகளாக என் குடும்பத்தில் அடுத்தடுத்து ஏதாவது ஒரு பிரச்சனைகள் வந்து கொண்டே இருந்தது. அவை எல்லாம் ஏதோ ஒரு விதத்தில் தீர்ந்து கொண்டும் வந்தது. ஆனால் அவைகளில் எல்லாம் யாரோ ஒருவரால் எப்படியோ சாய் பாபா என்ற பெயர் எங்கள் மனதிற்குள் வந்துவிடும்

எனக்கோ, எங்கள் குடும்பத்திற்கோ பாபா என்றால் யாரென்று தெரியாது. ஆனால் எப்படியோ பிரட்சனை தீர்ந்தால் சரி என்று அந்த நிகழ்விற்குப் பின் சாய்பாபா என்ற பெயரை மறந்து விடுவோம். ஆனால் கடந்த சில மாதங்களாக எங்கள் வீட்டில் மீண்டும் ஒரு பிரட்சனை.

மிகவும் மனக் கலக்கத்தில்

இருந்த என்னை, எங்கள் வீட்டிற்கு புதிதாய் குடிவந்த இந்த சகோதரிதான் ஏன் ஒரு மாதிரி இருக்கின்றீர்கள், மனம் கஷ்டமாக இருந்தால் என்னுடன் வாருங்கள் தியான மையத்திற்கு செல்வோம். அங்கு எங்களது குரு ஸ்ரீராம் அவர்கள் தியானம் கற்றுத் தந்து நம் பிரட்சனைகளுக்கும் வழி காட்டுவார். என்று அழைக்க, நானும் ஏதாவது நல்ல காலம் பிறக்காதா என்ற ஏக்கத்தில் தான் இங்கு வந்தேன்.



ஆனால் இங்கு வந்த பின்புதான் இது பாபா சென்டர் என்பதும், இவ்வளவு பெரிய பாபா இருப்பதும் தெரிந்தது. நம் வாழ்க்கையில் ஏன் இவர் அடிக்கடி வருகிறார். இவர் யார் என்று புரியாமல் ஆச்சர்யத்தில் அப்படியே வியந்து நின்றுவிட்டேன் என்றார்.

தொடர்ந்து, தன் கதையை குருவிடம் கூறினார் அந்த சகோதரி. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அவர்களது ஆறு வயது மகளுக்கு திடீரென உடல்நலமில்லாது போய் உடனடியாக தனியார் மருத்துவ மனையில் சேர்த்திருக்கின்றார்கள். மருத்துவர்கள் அனைத்து சோதனை களையும் செய்து பார்த்து, குழந்தைக்கு யூரின் இன்பெக்ஷன், யூரின் வரும் பாதையில் அடைப்பு இருக்கிறது. அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று பயமுறுத்தி விட்டார்களாம்.

மிகுந்த மனவேதனையில் இருந்த சமயம் அவர்களது வீட்டில் குடியிருந்த ஒரு இஸ்லாமிய சகோதரி அவரிடம் விபரம் கேட்க, அவரும் அவரது குழந்தையின் பிரட்சனையைக்கூறி வருத்தப்பட்டிருக்கிறார்.

உடனே அந்த சகோதரி அவரை வீட்டிற்குள் அழைத்து அவர்களது பீரோவில் இருந்து ஒரு புகைப்படத்தை எடுத்துவந்து அவரிடம் கொடுத்து, இவரது பெயர் சாயிபாபா. இவரிடம் உங்களது பிரட்சனையை கூறுங்கள். வேறு ஒருவரையும் நம்பாதீர்கள். இவரை மட்டுமே நம்புங்கள். நன்மையே நடக்கும். என்று கூறி அறுதல்படுத்தியிருக்கிறார்.

அவரும் அந்தப்புகைப்படத்தை வீட்டிற்கு எடுத்துவந்து அவரது பீரோவில் ஒட்டி வைத்திருக்கின்றார். அவ்வப்போது ஞாபகம் வரும்போது குழந்தைக்காக வேண்டிக் கொள்வதோடு சரி, மற்றபடி மறந்து விடுவாராம். அவர்



ஏன் பாபாவின் படத்தை பூஜை ரூமில் வைக்காமல் பீரோ கதவில் ஒட்டினார் என்றால், பாபாவின் படத்தை ஒரு இஸ்லாமிய சகோதரி கொடுத்ததால் அவர் இஸ்லாமிய கடவுளாக இருப்பாரோ என்ற சந்தேகத்தினால் தானாம். ஏனென்றால், அப்போது பாபாவை பற்றி எந்தக் கதையும் அவர்களுக்கு தெரியாமல் இருந்திருக்கிறது.

ஒரு சில நாட்களில் அவர்களது குழந்தை பழையபடி சரியாகிவிட்ட படியால் அவரும் அதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லையாம். காலப்போக்கில் பீரோவில் ஒட்டியிருந்த பாபா படமும் எங்கேயோ கீழே விழுந்து காணாமல் போயிருக்கிறது. சில மாதங்கள் கழித்ததும் மீண்டும் அவர்களது குழந்தைக்கு அதே போன்று பிரட்சனை வரவும், அப்போதும் அதே இஸ்லாமிய சகோதரியின் ஆலோசனையின்படி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றிருக்கின்றார்.

அங்கு குழந்தையை பரிசோதித்து விட்டு, ஏற்கனவே தனியார் மருத்துவ மனையில் கொடுத்திருந்த பரிசோதனை விபரத்தையும் மாறி, மாறிப் பார்த்த மருத்துவர், ஏம்மா, குழந்தைக்கு ஒன்னும் இல்லையேம்மா அவ நல்லாத்தானே இருக்கா.

ஏன் இவ்வளவு டெஸ்ட் எடுத்தீங்க, யாரு உங்களை எடுக்கச் சொன்னது? தேவை இல்லாம பச்சை குழந்தையை சிரமப்படுத்தாதீங்க என்றவர், தொடர்ந்து, கொஞ்சம் சத்து கம்மியா இருக்கு, சத்துமாத்திரை மட்டும் எழுதித்தரேன். அத மட்டும் கொடுங்க நல்லாயிரும் என்றிருக்கிறார்.

அவர்களுக்கு, ஒரு புறம் மகிழ்ச்சியா கவும், மறுபுறம் சந்தேகமாகவும் இருந்திருக்கிறது. யாரை நம்புவது, யாரை நம்பக்கூடாது என்று தெரியாமல் குழம்பியிருக்கிறார். பிறகு அவர்கள் வீட்டிற்கு வந்திருக்கிறார்கள். பிறகு ஓரிரெண்டு நாட்களில் குழந் தையும் சகஜமாகியிருக்கிறாள்.

நடந்த சம்பவத்தையும், சாயிபாபாவையும் அப்போது அவர்கள் தொடர்புபடுத்திப் பார்க்கவில்லையாம். அத்தோடு அதை விட்டுவிட்டார்களாம். ஒரு வாரத்திற்குப் பின்பு, அவர்களது குடும்ப நண்பர் ஒருவர் அவர்களது இல்லத்திற்கு வந்திருக்கின்றார். அவர் கோவா, மும்பை, குஜராத் என்று மக்களை சுற்றுலா அழைத்துச் செல்பவர்.

அவர் எதார்த்தமாக, அடுத்தவாரம்

செல்லும் மும்பை சுற்றுலாவிற்கு நான்கு நபர்கள் வரவில்லை. அவர்களுக்குப் பதில் நீங்கள் வருகின்றீர்களா என்று கேட்க, அவர்களது கணவரோ, வரலாம் என்று ஆசைதான். நீங்கள் திடீரென்று கேட்பதால் பணம் ஏற்பாடு செய்ய முடியாதே என்று கூற, அதற்கு நண்பரோ, நீங்கள் வந்தால் போதும். சுற்றுலா முடிந்து வந்த பின்பு பணம் கொடுத்தால் போதும் என்று கூட்டிச்சென்றிருக்கின்றார்.

சுற்றுலா குழுவினர் குஜராத், கோவா சென்றுவிட்டு மும்பை வரும் சமயம் மும்பையில் தீவிரவாதிகள் தாஜ் ஓட்டலை தாக்கிய சம்பவம் நடந்திருக்கின்றது. சுற்றுலா ஏற் பாட்டாளர் சமயோசிதமாக மும்பை சுற்றுலாவை தவிர்த்துவிட்டு நாசிக், சீரடி என்று திட்டத்தை மாற்றி அனைவரையும் பத்திரமாக சீரடிக்கு அழைத்துவந்துவிட்டனர்.

திடீரென பணய குழுவினர் சீரடிக்கு வந்ததால் குழுவில் உள்ள முக்கால்வாசிப்பேருக்கு பாபாவைப் பற்றி தெரியாமலே பாபாவை தரிசித்திருக்கின்றனர். அதில் நமது சகோதரியும் ஒருவர். பாபாவைப்பற்றி எதுவும் தெரியாமல், புண்ணியபூமி சீரடிக்குச் சென்று பகவான் சாயிநாதரை தரிசிக்கின்றோம் என்ற எண்ணமே சிறிதும் இல்லாமல், ஏதோ சாதாரணமாக ஆன்மீக சுற்றுலா செல்வதுபோன்று சென்று வந்திருக்கின்றனர்.

ஊருக்கு வந்த பின்பு இந்த கதையை மாடியில் குடியிருக்கும் பாபாவின் போட்டோவை கொடுத்த இஸ்லாமிய சகோதரியிடம் கூற, அந்த சகோதரியோ, பல ஆண்டுகளாக நான் சாயிபாபாவின் பக்தை. ஒரு முறையேனும் நான் சீரடிக்குச்சென்று பாபாவை தரிசிக்கமாட்டோமா என்று தவம் இருக்கின்றேன். என்னுடைய மதமும், சூழ்நிலைகளும் அதற்கு தடையாய் இருக்கின்றன. பாபாவை பார்ப்பதற்கு எனக்கு இன்னும் கொடுத்து வைக்கவில்லை.

ஆனால் நீங்கள் சீரடிக்குச் சென்று வந்து விட்டீர்கள். இதுதான் பாபாவின் மகிமை. அவரை விடாது நம்புங்கள். இனி உங்கள் மகளுக்கு ஒரு குறையும் வராது. அவளது வாழ்க்கை மிகச்சிறப்பாக இருக்கும். அவளுக்கு சாயி துணையிருப்பார் என்று கூறியிருக்கின்றார்.

அந்த இஸ்லாமிய சகோதரி கூறியதைப்போன்று அதற்குப் பின்பு அவரது மகளுக்கு ஒரு குறையுமில்லாது ஆரோக்கியமாக இருக்கின்றாளாம். ஆனால் தற்போது பிரச்சனை வேறுவடிவில் வந்திருக்கின்றதாம்.

அவளுடைய கணவர், தன்னுடைய நண்பரை நம்பி அவருடைய நிறுவனத்தில் தனது சேமிப்பு மொத்தத்தையும் முதலீடு செய்திருக்கின்றார். யாருடைய நேரமோ. நண்பர் மொத்த பணத்தையும் மோசடி செய்துவிட்டு தலைமறைவாகி விட்டாராம்.

அவர்களின் ஒட்டுமொத்த சேமிப்பும் கைவிட்டுப் போனதில் பலவிதமான துன்பங்களுக்கு ஆளாகி, மனவேதனையோடு வாழ்ந்து வந்தோம் அந்த சமயத்தில்தான் புவனா என்ற இந்த சகோதரி எங்கள் வீட்டு மாடிக்கு புதிதாக குடிவந்தார்கள்.

அப்போதுதான் நான் சோகமாகவே இருப்பதைக்கண்ட

சகோதரி என்னை இங்கு கூட்டிவந்தாள். என்று தன் கதையை குருவிடம் கூறி முடித்தாள். குரு அவர்களுக்கு ஒன்றை தெளிவாக கூறினார். நீங்கள் இழந்த பணத்தை மீட்டுக்கொடுக்க நான் மந்திரவாதியோ, காவல்துறை அதிகாரியோ அல்ல. மேலும் நீங்கள் பாபாவிற்கு பக்தை ஆகிவிட்டால் நீங்கள் இழந்த பணத்தை பாபா மீட்டுக் கொடுத்துவிடுவார் என்று கற்பனை செய்ய வேண்டாம். மாறாக பாபாவிடம் நீங்கள் காட்டும் பக்தி உண்மையாக இருந்தால், பாபா, உங்களுக்கு ஏற்படும் பிரட்சனைகளை தாங்கும் சக்தியையும், அதில் இருந்து சீக்கிரம் வெளியே வருவதற்குண்டான உறுதியையும் நிச்சயம் தருவார்.



தொடர்ந்து அவர் செய்வார் என்று உறுதியாகவும், நம்பிக்கையாகவும், பாபாவிடம் பக்தி செலுத்துங்கள், அவர் செய்யும் வரை பொறுமையாக இருங்கள். நிச்சயமாக நீங்கள் இழந்த தைவிட இரண்டுமடங்கு அதிகமாக உங்களுக்கு சாயி தருவார். என்று கூறி அவர்களுக்கு பாபா என்பவர் யார்? அவரை எப்படி அணுகுவது? தியானம் செய்வது எப்படி என்பதை எல்லாம் கூறி, மன நலத்திற்காகவும், உடல் நலத்திற்காகவும், யோகா, தியானம் ஆகியவற்றைக் கற்றுக்கொடுத்தார்.

அவர்களும் பாபாவின் மேல் பக்திபூண்டு குரு அவர்கள் கூறியதன் படி வாழ்ந்ததோடல்லாமல் தன் குடும்பத்தினரையும் அழைத்து வந்து பாபாவிற்கு தன்னால் இயன்ற சேவையினை செய்து வந்தார்கள். அடுத்த இரண்டாவது மாதம் அவரது கணவருக்கு கேரளாவில் நல்ல வேலை கிடைத்து கைநிறைய சம்பளம் கிடைத்தது.

கேரளா சென்ற கணவர் ஒரு நாள் கேரள அரசின் லாட்டரி டிக்கெட் ஒன்றை வாங்க, அதில் அவருக்கு ஐந்து லட்சம் பரிசு கிடைத்தது. அவர் நண்பரிடம் கொடுத்து ஏமாந்த தொகை இரண்டரை லட்சம். குரு சொன்னதைப் போன்று தான் இழந்ததைவிட இரண்டு மடங்கு தொகையை பாபா கொடுத்துவிட்டார் என்று மகிழ்ந்தார்.

அடுத்து குரு ஏற்பாடு செய்த சீரடி புனிதப் பயணத்தில் குடும்பத்துடன் கலந்து கொண்டு பாபாவிற்கு நன்றிகடன் செலுத்தினார். பாபாவின் மேல் உள்ள பக்தியை இறுகப்பற்றிக் கொண்டு வாழ்வில் மேன்மேலும் உயர்ந்து வருகின்றார் என்று சொல்லவும் வேண்டுமோ!

– தொடரும்

சுவாமி விவேகானந்தரின் ஞானமொழிகள்

நமது வாழ்க்கை சிறந்ததாகவும் தூய்மையுடையதாகவும் இருந்தால் மட்டும்தான் உலகமும் சிறப்பும், தூய்மையும், பெற்றதாக இருக்க முடியும். அது காரியம். நாம் அதை விளைவிக்கும் காரணம். எனவே நம்மை நாம் தூய்மைப்படுத்திக் கொள்வோமாக நம்மை நாம் பரிபூரணர்களாக்கிக் கொள்வோமாக.

சண்டையிடுவதிலும் குறை சொல்லிக்கொண்டிருப்பதிலும் என்ன பயன் இருக்கிறது? நிலைமையைச் சீர்படுத்தி அமைக்க அவை நமக்கு உதவப் போவதில்லை.

தான் செய்ய வேண்டிய கடமையாக அமையும் சிறிய அற்பமான வேலைகளுக்கு முணுமுணுப்பவன் எல்லாவற்றுக்கும் முணுமுணுக்கவே செய்வான். எப்போதும் முணுமுணுத்த படியே அவன் துன்பம் பொருந்திய வாழ்க்கை வாழ்வான். அவன் தொடுவது எல்லாமே தோல்வியில் முடியும்.

ஆனால் தன் கடமைகளைத் தவறாமல் ஒழுங்காகச் செய்துகொண்டு தன்னால் ஆனவரை வாழ்க்கையில் முயன்று கொண்டிருப்பவன் கட்டாயம் ஒளியைக் காண்பான். மேலும் மேலும் உயர்ந்த கடமைகள் அவனது பங்காக அவனைத் தேடித் தாமாகவந்து சேரும்.

தூய்மை பொறுமை விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாத வையாகும். அத்துடன்



இவை அனைத்திற்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்.

தன்னுடைய சொந்த சுக வசதிகளை மட்டும் கவனித்துக்கொண்டு, சோம்பல் வாழ்க்கை வாழும் சுயநலக்காரனுக்கு நரகத்திலுங்கூட இடம் கிடைக்காது. பகை பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால் , அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிடும்.

வேறு எந்தச் சக்தியாலும் அவற்றைத் தடுத்து நிறுத்த முடியாது. ஒரு முறை நீ அவற்றை இயங்கச் செய்து விட்டால் அதனால் வரும் விளைவையும் நீ ஏற்றே ஆகவேண்டும். இதை நீ நீனைவில் வைத்துக் கொண்டால் , தீய செயல்களைச் செய்வதிலிருந்து அது உன்னைத் தடுத்து நிறுத்தும்.

"பகவான் சாயி"



ஷீரடி சாய்பாபா பற்றியும், அவரின் மகிமைகள் பற்றியும் உலகினில் தெரியாதவர்களே இருக்க முடியாது என்னும் அளவிற்கு, பெயரை கேட்ட மாத்திரத்திலேயே தன்வசம் அவர்களை ஈர்த்து, பக்தராக்கிக் கொள்ளும் சக்தி படைத்தவர் ஷீரடி சாய்பாபா. உலகம் முழுவதும் சாய் ஸ்தாபனங்களும், சாய்பாபாவின் பக்தர்களும் நிறைந்திருக்கிறார்கள்.

மற்றொரு புறம் சாய்பாபா தனது பக்தர்களுக்கு நேடியாக காட்சி கொடுத்து அருள் செய்வதும், பல அதிசயங்களை நிகழ்த்துவதும் இன்றளவும் நடந்து கொண்டு தான் உள்ளது. தன்னை உண்மையாக நம்பும் பக்தர்களிடம் சாய்பாபாவே நேரில் வந்து பேசும் அதிசயமும் நிகழ்ந்து கொண்டு தான் உள்ளது.

சாய்பாபாவின் சமாதி கோவில் என்று போற்றப்படும் ஷீரடி, மகாராஷ்டிர மாநிலம், புனேவில் இருந்து 200 கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது. இங்கு தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து தரிசித்து செல்வதும், அவர்களின் வாழ்வில் பல அற்புத மாற்றங்களும் நிகழ்வதை இன்றளவும் நாம் கண்டும், கேட்டும் வருகிறோம்.

ஷீரடி சாய்பாபாவை ஒருமுறை தரிசித்தாலே, தரிசிப்பவர்களின் பாவங்கள் அனைத்தும் தொலைந்து விடுவதாக சொல்லப்படுகிறது. இந்தியாவிலேயே திருப்பதிக்கு பிறகு அதிக பக்தர்கள் வரும் கோவில் என்றால் அது ஷீரடி தான்.

சாய்பாபா முன்னால் போய் கண் மூடி நின்றாலே, பாபாவின் பேரருள், நம்மை வழிநடத்துவதை மெல்ல மெல்ல உணர முடியும். ஒரு முறை தன்னை பற்றி கேட்டவர்களை திரும்ப திரும்ப தன்னை நாடி வரவழைப்பதே பாபாவின் மகிமை. தன்னை வணக்கும் அனைத்து இடங்களிலும் அதிசயங்களை நிகழ்த்துவதே பாபாவின் கருணை.

"உன்னை எல்லோரும் வெறுக்கி றார்களே என்று வருந்தாதே. உன்னை நிறைய பேர் விரும்புகிறார்களே என்று கர்வப்படாதே. இந்த இரண்டுமே ஒன்று என்றும், அதுவே மாயை என்று என்னைப் பார்க்க வரும்

தருணத்தில், ஒருநாள் நீயே உணர்ந்து கொள்வாய்.

உனக்காக கவலைப்பட நான் இருக்கிறேன். வேறு எந்த சிந்தனையி லும் லயிக்காதே. குழப்பமாகிற, கோபமாகிற, வருந்துகிற தருணங்களில் எல்லாம் என்னை நினைத்துக்கொள். என்னையே நினைத்துக் கொண்டிரு. நல்லதே நடக்கும்'' என்கிறார் ஷீரடி சாய்பாபா

'எனக்கு மட்டும் ஏன் இப்படி?' என்று புலம் பாதவர்களே இல்லை. 'நான் ஒரு தப்பும் செய்யவில்லையே' என்று கண்ணீர் விடாதவர்களே இல்லை. 'எவ்வளவு சம்பாதித் தும் நாலுகாசு சேர்க்க முடிய வில்லையே' என்று கலங்காதவர்களும் யார்தான் இருக்கிறார்கள்?

இதுமாதிரியான தருணங்களில், பாபாவை நினைவில் கொள்ளுங்கள். 'சாய்ராம்' என்று மனதில் சொல்லிக் கொண்டே இருங்கள். தினமும் காலையிலும் மாலையிலும் சாய்ராம், சாய்ராம் என்று சொல்லுங்கள். மனக்கலக்கத்தில் இருந்து உங்களை விடுவிப்பார் பாபா.

பாபாவின் நாமத்தைக்கூறி பத்து நிமிடமாவது அமர்ந்து, கண்களை மூடி, பிரார்த்தனை செய்யுங்கள். உங்கள்




பிரட்சனைகள் அனைத்தையும் பாபா அறிவார். அதையே திரும்பத்திரும்ப அவரிடம் கூறிக்கொண்டிருக்காதீர்கள் கண்ணை மூடி இருபது நிமிடங்கள் அவரின் உருவத்தை உச்சந்தலையில் இருந்து பாதம் வரை நினைவில் கொண்டுவந்து தியானம் செய்யுங்கள்.

எப்பொழுதெல்லாம் உங்கள் பிரச்சனைகள் ஞாபகத்திற்கு வருகி றதோ அப்போதெல்லாம் அதை நினைப் பதை விட்டுவிட்டு பாபாவை நினையுங்கள். "சாய்ராம்" என்ற நாமத்தை விழித்திருக்கும் போதெல்லாம் கூறிக்கொண்டே இருங்கள். உங்கள் கஷ்டங்களையும் துக்கங்களையும் போக்க உங்களைத் தேடி பாபாவே வருவார்.

சாயிமகராஜ் குருவைதேடி
இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா
வாட்ஸ் அப் நம்பர்
99418 16692

பாபாவின் பாதங்களில் பாபா மாஸ்டர்



“பண்பின் சிகரம்”

பாண்டிச்சேரி பாபா மாஸ்டர் என்ற திரு.அருணாசலம் அவர்கள் கடந்த 19.01.24 வெள்ளிக்கிழமை மாலை 7.45 அளவில் தனது பூத உடலை உகுத்துவிட்டு பாபாவின் பாத கமலங்களில் சரணடைந்தார்.

எத்தனையோ சாயி அடியவர்களுக்கு குருவாகவும், வழிகாட்டியாகவும் விளங்கியவர். பாண்டிச்சேரி கமல சாயிபாபா, வேலூர் நவக்கிரக சாயிபாபா, போன்ற எண்ணற்ற சாயி ஆலயங்கள் எழக்காரமாக இருந்தவர். கனடா போன்ற வெளிநாடுகளில் சாயி பக்தி வளரக்காரணமாக இருந்தவர் நமது பாபா மாஸ்டர் அவர்கள்.



தன்னை நாடி வருபவர் கள் சிறியவராயினும், பெரியவரா யினும், அனைவருடனும் ஒரே மாதிரியாக பழக்கூடிய அற்புத மனம் படைத்த பண்பாளர். அவருக்கு, நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழின் சார்பாக சென்ற வருடம் “பண்பின் சிகரம்” என்ற விருதை வழங்கி பெருமைப்படுத்தியதை நினைகூர்கிறோம்.

எம்மை அவருக்கு அறிமுகம் இல்லாத காலத்திலேயே எமக்கு மிகப்பெரிய உதவியை செய்தவர் திரு.பாபா மாஸ்டர் அவர்கள்.

அவரின் உதவியை பெற்ற பின்புதான் அவர் யார் என்றே யாம் அறிந்து கொண்டோம். இதுவே எதையும் எதிர்பாராத அவரின் சாயி பக்திக்கு உதாரணம்.

வயது முதிர்வின் காரணமாக சில வருடங்களாக தனது பாண்டிச்சேரி இல்லத்தில் ஓய்வெடுத்து வந்த நிலையிலும், எம்மை அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஒருமுறையாவது நமது புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ள வேண்டும் என்று தன்னுடைய ஆசையை வெளிப்படுத்திக்கொண்டே இருப்பார். ஒவ்வொரு முறையும் புத்தகம் கிடைத்ததும். தொலைபேசியில் புத்தகம் கிடைத்தது சாய்ராம். ஆசீர்வாதம் என்று வாழ்த்துவார்.



அவர் மறைந்த செய்தியை அறிந்தபோது நாங்கள் சீரடியில் இருந்தோம். அன்று முழுவதும் அவரது நினைவாகவே இருந்தது. ஏனெனில் இந்த சீரடி புனிதப் பயணத்திற்கு வேண்டிய உதவிகளை செய்து ஆரம்பித்து வைத்ததே அவர்தான்.

மறுநாள் அதிகாலை 5 மணிக்கு சிவநேசன் சமாதியில் பக்தர்களின் முன்னிலையில் அவருடைய மறைவுச் செய்தியை தெரிவித்து, அவருக்காக பிரார்த்தனை செய்ய முற்பட்டபோது. திடீரென மின்சாரம் தடைபட்டது. அப்போது சமாதி கோவிலின் வாசலில் காவி உடையணிந்த ஒரு குள்ளமான உருவம் கைகளில் மின்சார விளக்கை வைத்துக்கொண்டு நின்றிருந்தது.

ஒரு நிமிடம்தான், அதற்குப்பின்பு மின்சாரம் வந்துவிட்டது. உடனே அந்த உருவம் மறைந்து விட்டது. நான் வெளியில் சென்று நாலாபுறமும் தேடிப் பார்த்தேன். யாருமில்லை. ஆனால் அந்த உருவத்தை என் மனம் பாபா மாஸ்டராகவே உணர்ந்தது. சதாசர்வகாலமும் சாயி, சாயி என்று வாழ்ந்த புனித ஆத்மா பகவான் சாயிநாதரிடமே அடைக்கலமாகிவிட்டது என்பதை நாங்கள் உணர்ந்து கொண்ட தருணம் அது.

நாங்கள் இந்த உலகில் வாழும் காலம் மட்டும் எங்களை காத்து ரட்சிக்க வேண்டும் என்று பகவான் சாயிநாதரையும், சாயிகுரு “பாபா மாஸ்டர்” அவர்களையும், மனப்பூர்வமாக வேண்டி விரும்பிப் பிரார்த்திக்கின்றோம்.

குரு வாழ்க! குருவே துணை!

பக்குவம்




சொத சொத என்று ஈரமாக இருக்கும் களிமண் மேல் திரி வைத்து நெய் ஊற்றி விளக்கேற்ற முடியுமா? முதலில் அதை அகலாக தட்டித் தட்டி வார்த்து வெய்யிலில் காய வைக்க வேண்டும்! இப்படித் தான் அகல் பக்குவமாக உருவாக்கப்படும். மண் தண்ணீரில் கரைகிறது! ஆனால் மண் பானையோ அதே தண்ணீரை சுமக்கிறது! காரணம் பக்குவம்!

அது போல் நமக்கு பக்குவம் வராத வரை பகவான் பாபா நமக்குள் ஆன்மீக ஒளியை ஏற்றுவதில்லை! நாம் ஜென்ம ஜென்மமாய் செய்த பாவங்களுடன் இந்த ஜென்மத்தில் யாருக்குமே தெரியாது என்று செய்து வருகிற தீய செயல்கள், அகந்தை எண்ணங்கள், கோபப் பேச்சுகள் இவற்றை எல்லாம் ஒன்று விடாமல் பாபா நம் கனவிலோ, தியானத்திலோ தோன்றிப் பேச ஆரம்பித்தால் நம்மால் தாங்க முடியுமா.

நாம் செய்கின்ற குற்றங்களை நாமே ஏற்றுக்கொள்கின்ற அளவிற்கு நாம் பக்குவப்பட வேண்டும்! பக்குவப்படாமல் இங்கு எந்த ஆன்ம மகிமையும் நிகழ்வதில்லை! அது போல் பக்குவத்திற்கும் வயதிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை!

மனசாட்சி



ஒருவரின் குறைகளை சுட்டிக் காட்டுவதற்கு முன் நாம் நமது குறைகளை ஒவ்வொன்றாக நீக்க முயற்சி செய்ய வேண்டும்! குறைகளைச் சொல்கிறேன் பேர்வழி என்கிற பெயரில் அவர்களை நாம் காயம் செய்கிற போது அது நமக்கான குறையாக இல்லாமல், அதை விட அதிகமான பாவமாக ஆன்மாவில் கறையாக படித்துவிடும்!

நாம் அன்பைத் தான் பரப்ப வேண்டுமே தவிர வலியை அல்ல! அன்பையே பாபா நம்மிடமிருந்து விரும்பும் ஒரே ஆன்மீக ரசவாதம்! ஒரு உளவியல் ரீதியான உண்மை என்னவெனில், பொய்யை மென்மையாகச் சொன்னால், அதை உலகம் உடனே ஏற்றுக் கொள்ளும். அதே போல் உண்மையாக இருப்பினும் அதை நாம் வன்மையாகச் சொன்னால் அதை உலகம் உடனே மறுதலித்து விடும்!

நாம் என்ன சொல்கிறோம் என்பதைப் பற்றி இந்த உலகத்திற்கு எந்தவிதமான கவலையும் இல்லை! அதனை எப்படிச் சொல்கிறோம் என்பதையே அது கவனிக்கிறது! நமது அதிகாரத்தை காண்பிப்பதற்கு ஆன்மீகம் ஒன்றும் அரசாட்சி இல்லை! ஆன்மீகம் ஒன்றே அனைவரின் மனசாட்சி!.

சீரடி சாயிநாதரின் புகழ் பரப்பும் மாத இதழில் விளம்பரம் செய்து சாயிநாதரின் ஆசியைப் பெற்று உங்களது வியாபாரத்தில் மேன்மேலும் வளர்ச்சியடையுங்கள்.



அன்பிற்கினிய சாயி சொந்தங்களே!

உங்களது நிறுவனங்கள், தயாரிப்புகள், மற்றும் உங்கள் வீட்டு பிறந்தநாள், திருமணநாள், விஷேசங்கள், தொடர்பான விளம்பரங்களை குறைந்த செலவில் வண்ணத்தில் பிரசுரித்து பயனடையுங்கள்.

குறைக்கப்பட்ட கட்டணங்கள்

பின் அட்டை கலர் முழுபக்கம் – ரூ.3000
நடுப்பக்கம் கலர் முழுபக்கம் – ரூ.2000
நடுப்பக்கம் கலர் அரைபக்கம் – ரூ.1000
கறுப்பு/ வெள்ளை முழு பக்கம் – ரூ.1500
கறுப்பு/வெள்ளை அரைபக்கம் – ரூ.750

குறிப்பு: சாயி சொந்தங்களுக்குள் திருமண பந்தத்தில் இணைய விரும்பும் மணமக்களுக்காக "வரன் தேவை" அரை பக்க வண்ண விளம்பரம் ரூ.500 மட்டுமே!

சாய் தியானாலயாவின் IIவது புனித சீரடிப் பயணம்

– ஜெயந்தி ஸ்ரீராம்

"சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தின்" 11 வது சீரடிப் புனிதப் பயணம் பகவான் சாயிநாதரின் பேரருளுடன் மிகச்சிறப்பாக நடைபெற்று நிறைவடைந்தது.

36 நபர்களுடன் 17.1.24 புதன் கிழமை சென்னையில் இருந்து புறப்பட்டு வியாழன் அன்று மதியம் 12 மணிக்கு, சீரடிக்குச் சென்றோம். அங்கு தங்கும் விடுதியை அடைந்து சிரமப்பரிகாரம் செய்து கொண்டு மதிய உணவை முடித்தோம்.

மதியம் 3 மணிக்கு பகவான் சாயிநாதரை கண்ணார கண்டு தரிசித்தோம். கூட்டம் இல்லாததால் அதிக நேரம் நின்று தரிசிக்க முடிந்தது. பின்பு சாயி அடியவர்களின் நினைவிடங்களுக்கும், அவர்களது இல்லங்களுக்கும் சென்று விட்டு இரவு உணவருந்திவிட்டு ஓய்வெடுத்துக் கொண்டோம்.



மறுநாள் காலையில் எங்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்பு பேரூந்தில் நாசிக் சென்று சோதி லிங்கம் திரைகம்பேஸ்வரரை தரிசித்து விட்டு, மதிய உணவு முடித்து மாலை கோதாவரி நதி, காலாராம், கோரா ராம், சீதா குகை, முக்திதாம் ஆகியவற்றை தரிசித்து இரவு சீரடி வந்து ஓய்வெடுத்துக்கொண்டோம்.

மறுநாள் அதிகாலை 6 மணிக் கெல்லாம் அனைவரும் சிவநேசன் சமாதி சென்றோம். அங்கு குரு








ஸ்ரீராம் அவர்கள் சத்சங்கம் செய்து தியானப்பயிற்சி கொடுத்தார். காலை வேளையில் தியானம் செய்தது மிகவும் அற்புதமாக இருந்தது. தவத்தின்போது இரண்டு பைரவர்கள் வந்து ஆசீவதித்தது எங்களை ஆச்சர்யப் படுத்தியது.

பின்பு விடுதிக்குத் திரும்பி காலை உணவை முடித்துக்கொண்டு, ஆட்டோமூலம், கந்தோபா ஆலயம், பஞ்சமுக கணபதி, சகூரி உபாசினி மகராஜ் சமாதி, ரஹதா குசால்சந்த் இல்லம், வீர பத்ரா ஆலயம், கற்பக விருட்சம், ஆகியவற்றை தரிசித்து விடுதிக்கு வந்து மதிய உணவை முடித்துக்கொண்டு சிறிது நேரம் ஓய்வெடுத்துக்கொண்டோம்.

பின்பு மாலையில் மீண்டும் சாயி நாதரை தரிசித்து, தேவையான பிரசாதப் பொருட்களை வாங்கிக் கொண்டு இரவு விடுதி திரும்பினோம். மறுநாள் காலையில் மீண்டும் சமாதி மந்திர் சென்று சாயிநாதரை தரிசித்துவிட்டு அன்று மதியம் 1 மணிக்குப் சிறப்பு பேரூந்து மூலம் புறப்பட்டு இரவு புனே வந்து அங்கிருந்து இரயிலில் மறுநாள் மாலை 4 மணிக்கு சென்னை வந்து சேர்ந்தோம்.

இப்பயணத்தில் பெங்களூரில் இருந்து மரியாதைக்குறிய சகோதரர், தொழிலதிபர் திரு. பிரசாத் சாய்ராம் அவர்களும் எங்களுடன் கலந்து கொண்டு புனிதப் பயணத்தை மேலும் சிறப்பித்தார். பாபாவின் அபிசேக தீர்த்தம், பிரசாதம், உதிப்பாக்கெட்டு களையும் பக்தர்களுக்கு விநியோகித்து, ஆனந்தப்படுத்தினார்.

சீரடியில் வசிக்கும் தமிழரான சுவாமிகள் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் நமது குழுவினருக்கு







தேவையான, பிஸ்கெட், பாபாவின் காலண்டர், கீ செயின், பேனா, உதி ஆகியவற்றை வழங்கி ஆசி வழங்கினார். உடல்நலமில்லாத போதும் எங்கள் குழுவினருக்காக சிரமப்பட்டு ஏற்பாடு செய்து அன்புடன் வழங்கினார். அவர் நீள் ஆயுள், நிறை செல்வம், வான்புகழ், மெய்ஞானம், ஆயுள், ஆரோக்கியத்துடன் வாழ்க வளமுடன் என்று பகவான் சாயிநாதரிடம் பிரார்த்திக்கின்றோம்.

இப்புனிதப் பயணத்தை எந்தவித இடையூறும் இன்றி மிகச்சிறப்பாக திருப்தியுடன் நடத்திக்கொடுத்த பகவான் சாயிநாதருக்கும், எங்களது ஆத்மகுரு திரு. ஸ்ரீராம் அவர்களுக்கும் எங்களது சீரடி புனிதப் பயண பக்தர்கள் குழுவின் சார்பாக மனமார்ந்த நன்றியினை காணிக்கையாக்குகிறோம்.

குரு வாழ்க!
குருவே துணை!

"ஸ்ரீ பாத ராஜம் சரணம் ப்ரபத்யே"

சமர்த்த சத்குரு வீரடி சாய் மஹராஜின் க்ருபையாலும், கலியுக பரிபூரண தத்த அவதாரியான, ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அனுக்கிரகத்தினாலும், கலியுகத்தில் இருந்து மீண்டும் சத்ய யுகம் உருவாக ஸ்ரீ வல்லபர் மீண்டும் அவதாரம் செய்து, உயிர்கள் அனைத்திற்கும் நல்லருள் பொழிந்திட, சுவாமியின் நாம ஜபம் ஒன்றே முழுமையான பாதுகாப்பு கருவியாகும்.



"தீகம்பரா தீகம்பரா ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப தீகம்பரா"

"தீகம்பரா தீகம்பரா ஸ்ரீ சக்ரதத்தாத்ரேயா தீகம்பரா"

– எனும் சக்தி வாய்ந்த நேர்மறை ஆற்றலைக் கூட்டும் மாமந்திரத்தை தினமும் "108" முறையாவது ஜபம் செய்து, எதிர்மறை சக்தியின் தாக்கத்தில் இருந்து தற்காப்பு பெற்றிடுவோம் வாருங்கள் நண்பர்களே!

"ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா"

விபரங்களுக்கு; **சுந்தர்சாய், 9789404451**

"தத்துவ ஞானி" ஜே.கிருஷ்ணமூர்த்தி

ஆன்மிக குருமார்களுக்கும் தத்துவவாதிகளுக்கும் சிந்தனையாளர்களுக்கும் பஞ்சமில்லாத நாடு இந்தியா. இந்த மண்ணில் பிறந்த மரபார்ந்த தத்துவ ஞானிகளில் ஒருவரல்ல, ஜே.கே.என்று அறியப்படும் "ஜித்து" கிருஷ்ணமூர்த்தி.

இந்திய தத்துவ மரபின் எந்தப் பிரிவுக்குள்ளும் வகைப்படுத்தப்பட முடியாதவர். அவர் யோகியோ முனிவரோ அல்ல. குருவோ,மடாதிபதியோ அல்ல. எந்தத் தத்துவத்தையும் அவர் உருவாக்கவில்லை. ஆனால், 20ம் நூற்றாண்டின் முக்கியமான தத்துவ ஞானிகளில் ஒருவராக உலகம் முழுவதும் அவர் மதிக்கப்படுகிறார்.

எந்த நூலையும் யாருடைய வார்த்தையையும் மேற்கோள் காட்டாமல் வாழ்க்கையைப் பற்றி அதன் பொருளையும், பொருளின்மையையும்பற்றி பேசியவர் ஜே.கே உண்மையைத் தேடும் யாத்திரையை ஒவ்வொருவருக்குள்ளும் சாத்தியப் படும் வழிமுறை அவருடையது.

கவித்துவமான சொற்களில் தன் எண்ணங்களை இயல்பாக வெளிப்படுத்தியவர்.முக்கியமான அறிவியலாளர்களும் தத்துவச் சிந்தனை கொண்டோரும் படைப்பாளி களும் அவரை மதிக்கிறார்கள். அவர் உயிரோடு இருந்தபோது சாமானிய



மனிதர்களிலிருந்து அறிவுஜீவிகள், அறிவியலாளர்கள்வரை பலரும் அவரோடு தொடர்ந்து உரையாடி வந்தனர். அவர் மறைந்த பின்பும் அவரது உரையாடல்களின்,உரைகளின் பதிவுகள் ஆழ்ந்த அக்கறையோடு கேட்கவும் படிக்கவும் படுகின்றன.

ஜே. கிருஷ்ணமூர்த்தி 1895ம் ஆண்டு மே மாதம் 11ம் தேதி ஆந்திரப் பிரதேசத்தில் (அன்றைய மதராஸ் மாகாணம்) உள்ள மதனபள்ளி என்னும் சிற்றூரில் பிறந்தார். அவரையும் அவரது சகோதரரையும் தியாசஃபிகல் சொசைட்டியின் தலைவராக இருந்த டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார தத்தெடுத்து வளர்த்தார்.

தத்துவ ஞானிகளின் தீர்க்கதரி சனத்தில் சொல்லப்பட்டிருக்கும்

உலக குரு கிருஷ்ணமூர்த்திதான் என்று அன்னிபெசன்ட்டும் அவரது நண்பர்களும் அறிவித்தார்கள்.

அத்தகைய குருவின் வெளிப்பாட்டுக்கு உலகைத் தயார்ப்படுத்துவதற்காக உலகளாவிய ஓர் அமைப்பை (ஆர்டர் ஆஃப் த ஸ்டார் இன் தி ஈஸ்ட்) நிறுவி இளம் கிருஷ்ணமூர்த்தியை அதன் தலைவராக நியமித்தார்கள்.

பின்னாளில், பல்வேறு படிமங்களையும் பீடங்களையும் அதிகாரக் கோட்பாடுகளையும் கலைக்கவிருந்த இளம் கிருஷ்ணமூர்த்தி, 1929ல் அந்தப் பதவியைத் துறந்தார். பெரிய அளவில் ஆதரவாளர்களையும் ஏகப்பட்ட சொத்துகளையும் கொண்டிருந்த அந்த அமைப்பையும் கலைத்து விட்டார்.

அதன் பிறகு, 1986 பிப்ரவரி 17ல் மரணம் அடையும் வரையிலும் சுமார் 60 ஆண்டுகள் உலகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்தார். மனித இனத்தில் தீவிரமான மாற்றங்கள் நிகழ வேண்டியதன் அவசியம் குறித்துப் பேசிவந்தார். அப்படி என்னதான் ஜே.கே சொன்னார்? அவர் எதையுமே சொல்லவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

எதையும் அவர் சொல்லவில்லை. எதையும் கற்றுத்தரவில்லை. எந்தத் தத்துவத்தையும் கண்டுபிடிக்கவோ நிறுவவோ இல்லை. பிறகு எப்படி அவர் முக்கியமான தத்துவ ஞானியாக பார்க்கப்படுகிறார்? கிருஷ்ணமூர்த்தி தெளிவாகப் பார்க்கச் சொல்கிறார். அதையும் அவர் கற்றுத்தருவதில்லை. பார்க்க உதவுகிறார். எதைப் பார்க்க உதவுகிறார்?



எல்லா ஞானிகளையும், மார்க்க தரிசிகளையும் போலவே அவரும் மனித துக்கத்தைப் பற்றிப் பேசுகிறார். துயரம், அவலம், பகைமை, பொறாமை, வன்முறை, நிம்மதியின் மை, துரோகம், மதம், சேவை, கள்ளத் தனம், அதிகாரம், மோசடி, தியாகம், உன்னதம் என அனைத்தையும் பற்றிப் பேசுகிறார்.

அவரிடம் வருபவர்கள் தங்கள் கேள்விகளையும், குறைகளையும் பகிர்ந்துகொள்கிறார்கள். அவர் உரைகளிலும், உரையாடல்களிலும் இவற்றைப் பற்றி விரிவாக பேசுகிறார். ஆனால், எந்தத் தீர்வையும் அவர் தருவதில்லை. இவற்றையெல்லாம் நாம் அணுகும் விதத்திலேயே பிரச்சினை இருக்கிறது என்கிறார்.

என்ன இருக்கிறது என்பதைப் பார்க்காமல் என்ன இருக்க வேண்டும் என்பதையே பார்த்துக்கொண்டும் யோசித்துக்கொண்டும் இருப்பதன்



விபரீதத்தை அடையாளம் காட்டுகிறார்.

மோதல்கள் பற்றிப் பேசுகிறார். வெவ்வேறு மனிதர்களுக் கிடையிலும் இனக் குழுக்களுக்கிடையிலும் சமூகங்களுக் கிடையிலும் நாடுகளுக் கிடையிலும் இருக்கும் மோதல்கள் பற்றி மட்டுமல்ல. ஒவ்வொரு மனிதருக்குள்ளும் இருக்கும் மோதல்கள் பற்றியும் பேசுகிறார்.

நாம் எதிர்மறையானது என்று நினைக்கும் ஒன்றின் இருப்பைப் போக்குவதாலோ அதை மாற்றுவ தாலோ இந்த மோதல் இல்லாமல் ஆகிவிடாது என்கிறார். மாறாக, இத்தகைய முயற்சியால் அந்த மோதல் அதிகரிக்கவே செய்யும் என்கிறார். மாற்ற வேண்டும் என்ற முயற்சியே மோதலுக்கு வழிவகுக்கும் அல்லது மோதலை அதிகரிக்கும் என்கிறார்.

அப்படியானால்,நம்மைத் துன்புறுத்தும் விஷயங்களை என்னதான் செய்வது? பாருங்கள் என்கிறார் ஜே.கே. நன்றாகப் பாருங்கள், அதன் சகல அம்சங்களையும் அவற்றின் வேர்களோடும் கிளைகளோடும் கண்டு உணருங்கள் என்கிறார். இந்த ஆழமான அறிதல் அல்லது உணர்தலே தேவை. இந்த உணர்தல் மாற்றத்தைக் கொண்டுவரும் என்கிறார். மாற்ற வேண்டும் என்னும் முயற்சி மோதலைத்தான் கொண்டுவரும்.

ஆகவே, நாம் செய்ய வேண்டியது நம்மைப் பற்றியும் நமது சூழலைப் பற்றியுமான நமது புரிந்துகொள்ளலை, விழிப்புணர்வை, ஆழமாக்கிக் கொண்டே போவதுதான். அது எப்படி அமைய வேண்டும் என்றால், சுயநலம் அற்ற, உரிமைகோரல்கள் அற்ற, அதிகார வேட்கை அற்ற, வசதியைக் கருத்தில் கொள்ளாத நிஜமான விழிப்புணர்வாக, புரிந்துணர்வாக இது அமைய வேண்டும்.

இது இயல்பான மாற்றங்களை நமக்குள் ஏற்படுத்தும் என்கிறார் ஜே.கே. அவரைப்போல உரை யாடியவர்கள் அரிது. கேள்விகளை எதிர்கொண்டவர்களும் அரிது. ஆனால், கேள்விகளுக்குப் பதிலளிப் பது தன் வேலை அல்ல என்று அவர் கருதுகிறார். ஆனாலும் அவரிடம் பேசுபவர்களுக்குத் தங்கள் கேள்விகளுக்கான பதில்கள்

கிடைக்கவே செய்கின்றன. இது எப்படிச் சாத்தியம்?

கேட்டவரிடமிருந்தே பதில்கள் வருகின்றன. ஜே.கே கேள்விகளுக்குப் பதிலாகக் கேள்விகளையே முன் வைப்பார். எனக்குக் கோபம் அதிகமாக வருகிறது, இதுதான் என் பிரச்சினை என்று அவரிடம் ஒருவர் வருகிறார் என்றால், கோபம் என்பது என்ன என்று அவரைக் கேட்பார் ஜே.கே. இது என்ன? எங்கிருந்து வருகிறது? ஏன் வருகிறது? இதன் வேர்கள் என்ன? கிளைகள், விழுதுகள் என்னென்ன? விளைவுகள் என்ன? இவற்றையெல்லாம் ஜே.கே அவரைச் சந்திக்க வருபவரும் சேர்ந்து ஆராயத் தொடங்குவார்கள்.

பதில்கள் அந்த நபரிடமிருந்து வரும். உரையாடல் தொடரத் தொடர அந்த நபர் தனக்கான விடைகளைக் கண்டுகொள்வார். ஜே.கேவுடனான உரையாடல் என்பது அகம் காட்டும் கண்ணாடி. இதுதான் ஜே.கேயின் ஆகப் பெரிய பங்களிப்பு என்று சொல்லலாம்.


அவர் சொன்ன ஒரே ஒரு சொல்லைக் கூட நீங்கள் நினைவு வைத்திருக்க வேண்டியதில்லை. அவர் சொன்ன எதையும் நீங்கள் பின்பற்ற வேண்டியதில்லை. உங்களை நீங்களே நிர்வாணப்படுத்திக்கொண்டு உங்களைப் பற்றிய அப்பட்டமான உண்மைகளை, பூச்சுகள் அற்ற உண்மைகளை உணரத் தலைப் பட்டீர்கள் என்றால், அந்தப் பாதையில் பயணிக்கிறீர்கள் என்றால், நீங்கள் ஜே.கேவைப் புரிந்துகொண்டு விட்டீர் கள் என்று பொருள்.

ஜே.கேயின் சிந்தனைகளின் மூலம் வாழ்க்கையுடன் இயல்பாக உறவாடுதல் நமக்கு சாத்தியமாகலாம். ஒரு மலையைப் பார்த்து ரசிக்கும் போது, அந்த மலையின் காட்சியில் தன்னை இழப்பது ஓர் அனுபவம். அந்த மலையின் நிலவியல் பற்றியோ அதன் கடந்த காலம், எதிர்காலம் பற்றியோ யோசிக்க ஆரம்பிக்கும்போதே அந்த மலைக்கும் நமக்குமான அனுபவம் நீர்த்துப்போகிறது.

இவ்வளவு அழகான மலையைப் பார்த்து ரசிக்க மற்றவர்களுக்குத் தெரிய வில்லையே என்று நினைக்கும்போது நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கும் மலை உங்களை விட்டு விலகுகிறது. காலம், இடம், ஆளுமைகள், உறவுகள், சொந்தம் கொண்டாடுதல், உரிமைகோரல், அறிவு, துக்கம், அதிகாரம், படிமம், விருப்பு, வெறுப்பு, பதற்றம், மார்தட்டல் என எந்தக் குறுக்கீடும் அற்று ஒன்றும்போதுதான் உண்மையான அனுபவம் சாத்தியமாகிறது.

இந்த அனுபவம் சாத்தியமாகும் இடத்தில் மோதலுக்கோ வன்முறைக்கோ துயரங்களுக்கோ இடமில்லை. உலகில் நமக்கான பாத்திரத்தை ஏற்றுச் செயல்படுவது ஒரு தளம். நடைமுறை வாழ்க்கைக்குத் தேவையானது இது. நம் சூழலோடு இசைவிணக்கத்துடன் உறவாடுவது இன்னொரு தளம். இ

ந்த இரு தளங்களுக்கிடையிலும் சமநிலை காண்பதே நாம் செய்யக் கூடிய ஆகப் பெரிய சாதனை. இந்தச் சமநிலை நிலவும் சூழலில் வன்முறைக்கும் மோதல்களுக்கும்



இடம் இருக்காது.

ஜே.கேயின் சொற்களோடு புழங்கப் புழங்க இதுபோன்ற எண்ணங்கள் உங்களுக்கு வரலாம். இதை அடைவதற்கான பார்வையை ஜே.கேயின் சிந்தனைகளிலிருந்து பெறலாம். கல்வி, வன்முறை, சமாதானம், கடவுள், போர்கள், அறிவு எனப் பல விஷயங்களைப் பற்றியும் ஜே.கே. பேசுகிறார். இவை முன்கூட்டியே யோசிக்கப்பட்ட எண்ணங்களின் வெளிப்பாடுகள் அல்ல. அடிவாரத்தில் இருந்து படிப்படியாக மலை ஏறும் அனுபவம் போன்றது.

அந்தக் கணத்தில் நிகழும் பயணம். பயணத்தினூடே உருவாகும் பாதைகள். மனக் கட்டுப்பாடு, புலனடக்கம் ஆகியவற்றை ஜே.கே. ஏற்கவில்லை. கட்டுப்பாடு, நீக்குதல், களைதல் என்பவை எல்லாமே எதிர்மறையான அணுகுமுறைகள் என்கிறார் ஜே.கே. விழிப்புதான் தீர்வு என்கிறார். அன்பு செலுத்து என்று அவர் சொல்லவில்லை. தேர்வுகள் அற்ற மெய்யான விழிப்பு இருந்தால் அன்பு செலுத்தும் மனமும் பொறாமை அம்சங்கள் தவிர்த்த மனமும் இயல்பாக மலரும் என்பதே ஜே.கேயின் அணுகுமுறை.

தேர்வுகள் அற்ற விழிப்புணர்வு, வாழ்வெனும் நீரோட்டத்தில் முடங்கி விடாமல், மூழ்கிவிடாமல் மிதந்தபடி இருத்தல்,அறிவின் சுமையிலிருந்து விடுதலை, அனுபவத்துக்கும் அனுபவிப்பவருக்கும் இடையேயான இடைவெளி தவிர்த்தல், தற்கணத்தில் வாழுதல் எனப் பல சொற்றொடர்களை கிருஷ்ணமூர்த்தியின் சிந்தனைகளாக சொல்லலாம்.

இவற்றைப் பின்பற்ற முயற்சி செய்யலாம்.பிரச்சாரம்கூடசெய்யலாம். ஆனால், தன்னை உள்ளது உள்ள படியே அறிதல் என்னும் முயற்சியில் ஒரு சில எட்டுக்களேனும் எடுத்து வைக்க இயலாதவர்களுக்கு இந்தச் சொற்களால் எந்தப் பலனும் இல்லை.

இந்த இடத்துக்கு வந்து சேரப் பாதை இல்லை. ஜே.கே. சொல்வதுபோல, உண்மை என்பது பாதைகள் அற்ற நிலம். உண்மையான அறிதலை, விழிப்பை, விழையும் மன இயக்கம் கொண்டவர்கள் இவ்வுலகப் பயணத்தில் "ஜித்து" கிருஷ்ணமூர்த்தியைத் தன் சக பயணியாகக் உணரலாம்.

எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer:
Castrol | SERVO | MAK LUBRICANTS | Shell Lubricants | MOTUL | AMARON | SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES









GS Caltex
Castrol

P.Sivasaravanan B.E.,
98434 40806

Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON










HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

புத்தியுள்ள குழந்தைக்கு புடலங்காய்

இதயநோய்களுக்குச் சிறந்த டானிக். காய்ச்சல் ஏற்படாமல் தடுக்கும் மருந்து. உடல் சூட்டைத் தணித்துக் குளிர்ச்சி தரும் காய்கறி. நீரிழிவு நோயாளிகள் உடல் எடையை எளிதாகக் குறைக்கப் போதுமான அளவு சத்தும், குறைந்த அளவு கலோரியும் கொண்ட காய்கறி. மஞ்சள் காமாலை, தலை வழுக்கை எனப்பல்வேறு நோய்களைக் குணப்படுத்தும் அறிய காய்கறியான புடலங்காய் பேதி மருந்தாகவும் பயன்படுகிறது.



புடலங்காயின் தாயகம் இந்தியா. காய்ச்சல் நேரத்தில் காய்ச்சலை மட்டுப்படுத்தப் புடலங்காய் பொறியல் செய்து சாப்பிட்டால் போதும். விட்டு விட்டுக் காய்ச்சல் ஏற்படும் உடல் வாகைப் பெற்றவர்கள் தொடர்ந்து ஒரு வாரம் புடலங்காய்ப் பொறியல், கூட்டு என்று தயாரித்துச் சாப்பிட்டால் போதும், நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகம் தரும் காய்கறி இது. பிறகு இதுபோன்ற திடீர்க்காய்ச்சல் வராது.

அதிக உழைப்பு, கவலை, நோயால் அல்லல்படுபவர்களுக்கு நெஞ்சுத் துடிப்பு மிகவேகமாய் இருக்கும். சிலருக்கு இதயவலியும் ஏற்படும். இப்படிப்பட்டவர்கள் புடலங்காயைச் சாப்பிடவேண்டும். மேலும், அவர்கள் அதிகாலையில் புடலைக் கொடியில் இளந்தளிரான இலையைப் பறித்து, சாறாகப் பிழிந்து வைத்துக்கொண்டு, ஒரு வேளைக்கு இரண்டு தேக்கரண்டி வீதம் மூன்று வேளை வீதம் சாப்பிட வேண்டும். இதனால், இதயம் கடும் முயற்சி செய்து இயங்குவது சமமாகி சாதாரணமாக இயங்க ஆரம்பிக்கும்.

இளமையிலேயே வழுக்கைத் தலையுள்ளவர்கள் மேற்கண்ட முறையில் புடலங்காய் இலைச் சாற்றைத் தயாரித்து தினமும் ஒரு கப் அருந்தி வரவேண்டும். வாரத்தில் மூன்று நான்கு நாள்களாவது புடலங்காயையும் உணவுடன் சேர்த்து வரவேண்டும். விரைவில் இவர்களுக்கு வழுக்கை விழுந்த இடத்தில் முடிமுளைக்க ஆரம்பிக்கும்! இதற்காகவாவது வீட்டில் புடலைக் கொடியை வளர்த்துத் தினமும் பசுமையான இலைகளைப் பறித்துச் சாறாக்கி அருந்த வேண்டும்.

காய்ச்சல் நேரத்தில் புடலங்காயைத் தண்ணீரில் கொதிக்க வைத்துக் காய்ச்சிக் கஷாயமாக்கி சிறிது தேன் கலந்து அருந்தினால் பித்தம் சம்பந்தமான காய்ச்சல், நாக்குவறட்சி,

மலச்சிக்கல் போன்றவை குணமாகும்.



காய்ச்சல் கடுமையாய் இருந்தால் 50 கிராம் புடலங்காய்த் துண்டுகளையும் 50 கிராம் கொத்துமல்லியையும் இரவு முழுவதும் தண்ணீரில் ஊறப்போட்டு, மறுநாள் அதை வடித்து அருந்த வேண்டும். பித்தநோயைக் குணப்படுத்த இலைக்கஷாயத்துடன் கொத்தமல்லியையும் சேர்த்து அருந்தலாம்.

கல்லீரல் கோளாறு, கீல் வாதம் முதலியவற்றுக்கு இலைக் கஷாயத்தை தைலம் போல மேல் பூச்சாக உடல் முழுவதும் தேய்க்க நல்ல பலன் கிடைக்கும்.

மஞ்சள் காமாலையைக் குணமாக்க முப்பது முதல் ஐம்பது கிராம்வரை எடையுள்ள புடலங்காய்க்கொடியின் இலைகளைக் கொத்துமல்லியுடன் இரவு முழுவதும் ஊறப்போட்டு, காலையில் அதை வடித்து, மூன்று வேளைக்குச் சமமாகப் பிரித்து வைத்துக்கொண்டு அதை அருந்த வேண்டும்.

நாட்டு மருத்துவத்தில் முக்கியமான மருந்தாய் இருக்கும் புடலை இலை இப்போது இந்திய இயற்கை மருத்துவத்திலும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. குழந்தைகளுக்குப் பேதி மருந்தாகவும், வாந்தி எடுக்க வைக்கும் மருந்தாகவும் இந்த இலைச்சாற்றையே பயன்படுத்தலாம்.

100 கிராம் புடலங்காயில் கிடைக்கும் கலோரி அளவு 18 தான். போதுமான அளவு புரதம், கொழுப்பு. நார்ச்சத்து, மாவுச்சத்து, இரும்புச்சத்து, கரோட்டின், தயாமின், ரிபோபிலவின், நியாஸின் போன்றவை இருப்பதால், நீரிழிவு நோயாளிகள் இதை நன்கு சேர்த்துக்கொண்டால் உடல் எடையைப் படிப்படியாகக் குறைத்துவிடலாம். உடலுக்குச் சத்துணவும் கிடைக்கும். உடலும் பலவீனமடையாது.

புடலையைக் காயாகத்தான் வேகவைத்துச் சமைத்து உண்ணவேண்டும். பழுத்த புடலையை உண்ணக்கூடாது. அது எளிதில் செரிமானம் ஆகாது. பழுத்த புடலையின் உள்ள காய்களை மட்டும் காயவைத்து, அதை இரவில் ஊறவைத்துத் தண்ணீரை வடிகட்டி அருந்தினால் பேதி ஆகும். பழுத்த புடலங்காயில் உள்ள விதைகளைப் பேதிமருந்தாக மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு தினசரி புடலங்காயை உணவில் சேர்த்துக் கொண்டால் இதயநோயின்றியும், உடல் எடை அதிகரிக்காமலும், அடிக்கடி காய்ச்சல் ஏற்படாமலும் வாழலாம். ஆரோக்கியமாய் வாழப்பயன்படும் அரிய மருந்து, புடலை.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

தொடர் –31

சாய் சரவணன்

"அதி தேவதை"



நாம் வாழும் தேசம் புண்ணியமான பாரத தேசம். பாரத தேசமான நம் நாடு ஆன்மீகத்தை வளர்க்கும் தாய்நாடாக விளங்குகிறது. பகவானின் எத்தனையோ அவதாரங்களும், லீலைகளும் நடந்த பூமி இது. பகவானின் பிரதிரூபமேயான அவரது திருவடியின் வடிவமேயான ஞானிகளும், மகான்களும், சாதுக்களும் அவதரித்து மக்களுக்கு சமரச சன்மார்க்கத்தை போதித்த பரம புண்ணிய பூமி இதுவே!

அனைத்து மகான்களும் கூறும் ஒரே உபதேசம் யாதெனில் சத்குருவின் பரமபாதத்தையோ (அ) ஸ்ரீ ஹரியின் புண்ய திருவடியையோ சரணடைந்தது பக்தி செய்யுங்கள் என்பதே ஆகும். அதுவே பிறந்த பிறவிப்பயன் ஆன முக்தியை தந்து விடும் என்கின்றனர்.

இப்படிப்பட்ட உபதேசத்தை வழங்கிய எண்ணற்ற மஹான்கள் அதன்படி நமக்காக வாழ்ந்து காட்டியும் இருக்கிறார்கள். பிறவிப்பயன் யாதெனில் பரமனை அடைவது ஒன்றே! அவனை அடையும் வழியை அவனே குருவாய் வந்து வழி காட்டிய பல அற்புத வரலாறுகளும் நிறைந்து காணப்படுகின்றது.

பகவான் எதற்கு கட்டுப்பட்டவன் என சிந்தித்தால் பக்தி என்ற ஒன்றிற்கு மட்டுமே அவன் அடிமை! பக்தியில் பல வகையாக இருப்பினும் "பாவ பக்தி ஒன்றே முக்தியை தர வல்லது" பாவ பக்தி என்ற சொல்லை தமிழில் கூறுவோமானால் "உன்னதமான ஆன்மீக பேருணர்வு" ஆகும். பாவபக்திக்கு பகவான் கட்டுப்பட்டவன் என்று மகாகவி பாரதி கூறுகிறார்.

காவி உடை வேண்டாம்! ஜடா முடி வேண்டாம்! பாவித்தல் போதுமே!

பரமநிலை எய்துவதற்கே!* என்கிறார் பாரதி. மீரா பாய், ஜனாபாய், ராமகிருஷ்ண பரமஹம்சர், ஸ்ரீ ஆனந்த மாயி, ஸ்ரீசைதன்ய மஹாபிரபு போன்ற சில மஹான்களின் சரிதையை

படிப்பதால் பாவ பக்தியை பற்றி அறிந்து கொள்ளலாமே தவிர அனுப வத்திற்கு வருவது கடினம் ஆகும். பகவானின் பக்தனோ பாவ பக்தியின் அனுபவத்தை தன்னிடம் வந்தவனுக்கு தந்து அவனையும் தன்னைப் போல் மாற்றிவிடுவான். சத்பக்தனிடம் சமர்ப்பணம் ஆனால் நாமும் பகவானின் பக்தனாகலாம்.

"காதலாகி கசிந்து உருகி கண்ணீர் மல்கி" என்று திருஞானசம்பந்தர் பாடினார். அவருடைய பாவ பக்தி நம்மை போன்றோருக்கு வரவேண்டுமாயின் அவரது திருவடியை பற்றினால் ஒழிய நமக்கு வராது. பாவ பக்தியில் திளைக்கும் பக்தன் பகவானோடு குருகிருபையால் இரண்டறக் கலந்து ஆனந்தத்தில் மூழ்கி நிற்பான்.

மேலும் பகவானே மனிதப்பிறவி எடுத்தும் உன் கருணையை அனுபவித்தும் உன்னைக் காணாமல் இருக்கிறேனே என்ற தாபம் கொண்ட நிலையிலும் இருப்பான். இந்நிலை கொண்டோருக்கு பகவானின் கிருபையும் முக்தியும் கிட்டிவிடும்.

பிரகலாதனின் வரலாற்றில் சிறு பிள்ளையாயினும் குரு கிருபையால் ஸ்ரீஹரி பக்தி உண்டாகியது. அவர் கொண்ட பாவ பக்தியின் சக்தி யானது பிரரகலாதனை பல் வேறு துன்பங்களிலிருந்து மீட்டது. மீராபாய்க்கு பாலில் விஷம் கலக்கப் பட்டது.

அப்பாலை மீராபாய் கிருஷ்ணனுக்கு சமர்பணம் செய்ததன் விளைவு பாலில் விஷம் முறிந்தது. இதுபோல எண்ணற்ற பக்தர்களின் வாழ்வில் அவர்கள் குரு கிருபையால் பாவ பக்தி கிடைக்கப்பெற்று பக்தியால் பகவானை வசப்படுத்தி அவனோடு இரண்டறக்கலந்த லீலையோ எத்தனையோ?

பகவான் ரூபமையான சத்குருமார்களும் பாவ பக்திக்கு கட்டுப்பட்டு பக்தனிடம் தன்னையே தந்த லீலைகளும் அதிகம்! நாம் ஒன்றை மட்டும் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். பகவான் வேறு பக்தன் வேறு அல்ல, இருவரும் ஒருவரே ஆவார். சத்குருவும் அவரது பக்தனும் வேறு வேறு அல்ல இருவரும் ஒருவரே ஆவார்.

புண்ணிய ஸ்தலமான சீரடியில் வீற்றிருக்கும் பகவானும் சத்குருவும் ஆன ஸ்ரீ சாயிநாதர் பெரும்பாலும் விரும்பி ஏற்பது பாவ பக்தியை மட்டுமே! ஸ்ரீ சாய் சத்சரிதையிலும், பல்வேறு பாபாவின் பக்தர்களின் அனுபவங்கள் மூலம் பார்ப்போமே யானால் புறத்தே நடக்கும் எதையும் அவன் விரும்புவதில்லை. பக்தியோடும், பிரேமையோடும் பக்தன் எதை அர்பணித்தாலும் அதை அன்போடு பாபா ஏற்றுக்கொண்ட லீலைகளும் ஏராளம்.

சீரடியில் ஆரம்ப காலத்தில் வழிபாடு தொடங்கிய லீலையை கண்டிருப்போம். மஹல்சாபதியின் தூய்மையான பக்திக்கு பாபா என்ன செய்தார் என்ற லீலையைக் கண்டோம். டாக்டர் பண்டிட் சாயிபாபாவை பகீராக கருதாமல் தன் குருவான ரகுநாத் மகராஜ் என பாவித்து பாபாவின் நெற்றியில் சந்தனத்தால் மூன்று பட்டைகள் இட்ட லீலையைக் கண்டிருப்போம்.

தர்கட் குடும்பத்தில் ஏற்பட்ட அனுபவங்கள் ஆன பாபா தர்கட் அம்மையாரின் பால்பேடாவை



ஏற்றுக் கொண்டு அவரது பக்தியை வெளிக்காட்டினார் என்பதையும் அறிவோம்.

காகாமஹாஜனியின் உள்ளார்ந்த நம்பிக்கையை கவனித்த பாபா அவரது வலியை நீக்கியது போன்றதான லீலைகள் ஏராளம் ஆனாலும், பாபாவே தானே முன்வந்து பக்தர்களை சீரடிக்கு இழுத்து தன் மீது பக்தியையும், நம்பிக்கையும் ஏற்படும் படியான லீலைகளைச் செய்து கொண்டே இருந்தார். பாவபக்தியின் பிரேமையை மட்டுமே உணவாக ஏற்றுக் கொள்ளும் நம் சாயிநாதரின் தீராத பசியைப் போக்க வந்தவள் நம் இராதாகிருஷ்ணமாயி!

ஆயியை பற்றிய பல நிகழ்வுகளைக் கண்டோம் என்றாலும் அதன் உள்ளடக்கிய பிரேம பக்தியை மட்டும் நாம் அறிந்து கொண்டால் போதும்! அத்தகைய பிரேம பக்தி நமக்கு வழிகாட்டியாக இருக்கும்!

ஆயி சீரடியில் கால்பதித்த தினத்திலிருந்து அவளது பிரேம பக்தி பாவத்தின் அலைகள் சீரடி முழுக்க பரவியது. பிரேம பக்தியின் முழுமையான வடிவமாக திகழ்ந்தாள் ஆயி. நவவித பக்தியை வர்ணிக்கும் தேவரிஷி நாரதர், பக்தியின் உண்மையான உருவம் பிரேமை என்கிறார்.

பரமபிரேம பக்தியை பகவான் மீது கொண்டால் பூஜையோ, பதினாறு வித உபசாரமோ வேண்டாம்! பராபக்தியின் முன் யாவும் புறம்தள்ளப்படுகின்றன.

அன்பால், அன்புடன், அன்பையே, அன்பிற்காக நிவேதனம் செய்வதே ஆத்ம நிவேதனம் என்பர். அப்படிப் பட்ட ஆத்மநிவேதனமாய் சாயிநாதரிடம் தன்னையே உடல், பொருள், ஆவி, மனோவாக்கு என யாவற்றையும் அவரது திருவடி தனில் அர்ப்பணம் செய்து வாழ்ந்து வந்தாள் ஆயி.

பூலோக வைகுண்டம் என்பது ஆயிக்கு மசூதியே ஆகும். வைகுண்டத்தில் வாழும் ஸ்ரீஹரியே மசூதியில் வீற்றிருந்து லீலை புரிகிறார் என்பது ஆயியின் தூய்மையான பாவ பக்தி, பண்டரியைப் போல சீரடி மாற வேண்டும் என சாயியோடு சங்கல்பம் செய்து எண்ணற்ற மாற்றங்களைக் கொண்டு வர குருபக்தியோடு சதா சேவை செய்து வந்தாள் ஆயி. இங்கு இராதாகிருஷ்ணமாயியின் பாவ பக்தியை முழுவதையும் குறிப்பிட இயலாது.

காரணம், ஆயி பக்தியின் வடிவமே ஆவாள். பக்தியை பற்றியே அறியாத அடியேனுக்கு பிரேம பக்தியின் வடிவமேயான ஆயியின் பாவ பக்தியை

எப்படி வர்ணிக்க முடியும்.

இந்நூலில் உள்ள ஒவ்வொரு அத்தியாயத்திலும் ஆயியின் பாவ பக்தியை நிச்சயமாக கண்டு அனுபவிக்கலாம். குறிப்பாக ஒரு விஷயத்தை அடியேன் கூறுகிறேன். பாபாவின் பக்தர் ஆன டாக்டர் கேசவ் கூறுகிறார் ஆயியை பற்றி: "ஆயியின் வாழ்க்கையானது ஸ்ரீகிருஷ்ணனுக்கே ஸமர்ப்பணமான ராதையின் விலாசம் போன்றதே என்கிறார். இங்கு விலாசம் என்றால் பாவ பக்தியுடன் கூடிய செயல் முறைகள் ஆகும்."

சாயிநாதர் எங்கு சென்றாலும் அவர் செல்வதற்கு முன்னாலேயே அவரது பொற்தாமரை திருவடிகள் நோகாதவாறு இருக்க வீதிகளை சதா சுத்தம் செய்வாள் ஆயி! அவளது பிரேம பக்தியை உண்ணும் சாயி ஒருமுறை கூறினார். "வீதியில் பல முறை நடந்தும், சிலமுறை ஐந்து வீடுகளுக்கு சென்று வந்தாலும், தினசரி லெண்டிபார்க் போய் வந்தும் கூட அந்த திருப்பாதங்கள் அன்றலர்ந்த தாமரை மலர்ப் போல் உள்ளதென்பார் நம் குருநாதர்."

இப்படியாக ஆயியின் பிரேம பக்தியை சொல்லிக்கொண்டே போக லாம். பாபாவிற்கு உண்மையில் பிடித் தது நாம் அவர் மீது கொள்ளும் மிகுந்த பிரேமையும், அன்புமே அல்லவா!

– தொடரும்

சாயி பக்தி!



பகவான் பாபா எங்கும் நிறைந்தவர் என்கிறோம்! அது உண்மையே ஆயினும், அவர் எங்கும் நிறைந்தவர் அல்ல! எங்கெல்லாம் அதர்மம் நடை பெறுகிறதோ,எங்கெல்லாம் அக்கிரமம் அரங்கேறு கிறதோ, எங்கெல்லாம் அட்டூழியம் நிகழ்கிறதோ அங்கெல்லாம் பாபா இல்லை!

எங்கு இறைவனுக்கு சரிசமமாய் சராசரி மனிதன் பெரிது பெரிதாக விளம்பரப்படுத்தப் படுகிறானோ, அந்தப் பெரும் பொய்யில் பாபா இல்லை! இருள் இருக்கிற போது வெளிச்சம் எப்படி இருக்க முடியும்? ஏதாவது ஒன்று தான் இருக்கும்!

பந்தய நோக்கோடு பாண்டவ கௌரவர் சொக்கட்டான் விளையாடிய போது அவர்களின் அருகே பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் இல்லை அல்லவா அது போல் தான் இதுவும்! மனிதன் விதைத்த பாவங்களை மனிதனே அறுவடை செய்ய வேண்டும்! இதில் இறைவனை குறை சொல்வதால் மேலும், மேலும் மனிதன் பாவங்களையே சேர்த்துக் கொள்கிறான்!

புனிதமான பூஜை அறையாய் பூமியை மனிதனுக்கு வழங்கினான் இறைவன்! அதை தனது சுயநல அகந்தை வெறியில் மனிதன் கழிப்பறையாய் மாற்றியதில் இறைவனுக்கு எந்தத் தொடர்பும் இல்லை!

ஒவ்வொருவரின் தன்நிலை சுத்தீ கரிப்பே தரணியை சுத்தப்படுத்துகிறது! தினசரி மனதை நாம் சுத்தப்படுத்தியே ஆக வேண்டும்! அதற்கான எளிய வழியை சாயி பக்தி மட்டுமே நமக்கு போதிக்கும்.

தொடர் –8

சுந்தர்சாய்

திருவருள் தேடி


ஓம் சாய்ராம்.

நமது பிரபஞ்சத்தின் தலைவனாய் அமர்ந்து உலக உயிரினங்கள் அனைத் திற்கும் திருவருள் பொழியும் சமர்த்த சத்குரு சாய் மகராஜ் பொற்பாதம் பணிந்து, நமது சாய் அன்பர்கள் அனைவரையும் வணங்கி நமது திருவருள் பாதையை தொடர்வோம் நண்பர்களே!

சென்ற இதழில் எமக்கு மட்டுமின்றி எம்மை கருவியாக்கி, நாம் வேலைக்குச் சென்ற ரஷ்ய நாட்டில், அந்நாட்டின் ஒரு இஸ்லாமியக் குடிமகனுக்கும் வாழ்வை வளமாக்கிய நமது சத்திய சாய் நாதரின் கருணையை என்னவென்று வர்ணிப்பது.

சர்வம், சகலம், சத்ய சாய் மயம் ஜெகத்! ஆம். நானும் ஒரு மொழி தெரியாத ஒரு தேசத்திற்கு நம் நாட்டின் ஹை பவர் டீம் என்று அறியப்படும் துணை அமைச்சர் மற்றும் இந்திய தூதரக அதிகாரிகளுடன் சென்று தனியே அங்கு ஒரு மொழி பெயர்பாளருடன் எனது தொழில் முறை பயணத்தை தொடங்கிய சமயம்,

எனது மொழி பெயர்ப்பாளர், "கேனன் ஹமிதோவ்" எனும் 25 வயதுடைய இஸ்லாமிய இளைஞர். அவரை நான் சந்திக்க அங்கு வியாபாரம் செய்யும் ஓர் வட இந்திய இளைஞர் ஏற்பாடு செய்தார். ஓரளவு ஆங்கிலம் பேசத் தெரிந்த "கேனன்" மிகவும் துரதிர்ஷ்ட மான நிலையில்,



வாழ்வை கிட்டத்தட்ட முடித்துக் கொள்ளும் கட்டத்தில் இருந்தார்.

வேலையின்றி தனது சகோதரி வீட்டில் தங்கி எல்லாவிதமான மனக் கஷ்டங்க ளையும், பணக்கஷ்டத்துடன் சேர்ந்து அனுபவித்துக் கொண்டி ருந்தார். அவருக்கு என்னுடைய அறிமுகம் மற்றும் நேர்காணல் ஒரு பெரிய மாற்றமாக அமையவிருந்ததை நாங்கள் இருவருமே அச்சமயம் அறிந்திருக்கவில்லை. அந்த சூழ்நிலை யில் நான் தரவிருக்கும் சிறிய தொகைக்காக என்னுடன் பயணிக்க உடனே ஒத்துக் கொண்டார்.

தினம் வெறும் ஐந்து அமெரிக்க

டாலர் என்ற முறையில் என்னுடன் வேலை செய்தார். மதிய உணவு என் பொறுப்பு. இந்த நிலையில் அவரது இளம் வயது ஆசையாக அவரது மாமாவின் மகளை மணந்து கொள்ள ஒரு ஆசை வேறு அடிமனதில் வைத்திருந்தார். அவர் என்னிடம் கண்ணீர் மல்க அவருடைய சொந்த கதையை சோகமாக எடுத்துரைக்க, நானும் அவருக்கு ஆறுதல் கூறி எல்லாவற்றையும் மறந்து நன்கு முனைப்புடன் உழைக்குமாறு அறிவுரை கூறினேன்.

வேலை நேரம் தவிர்த்து, சில பர்சனல் விஷயங்களை பகிரும் சமயம் நான் அவரிடம் சத்யசாயியின் லீலைகளைப் பற்றியும் எனது வாழ்வில் நிகழ்ந்த இனிய திருப்பங்களையும் கூறி அவருக்கு இறை வழிபாட்டை வலியுறுத்தினேன். அவர்கள் 'மாடர்ன்' என்று சொல்லிக் கொள்ளும் மதவழிபாட்டில் நம்பிக்கை குறைந்த இஸ்லாமியர்கள், அங்கு "மசூதி, தொழுகை" இதையெல்லாம் பலர் பொருட்படுத்தாமல் இருந்தது எனக்கு பெரிய ஆச்சரியமாக இருந்தது.

பின்னர் அதை விவரமாக ஆராய்ச்சி செய்யும் பொழுது அவர்கள் அனைவரும் ரஷ்ய ராணுவத்தால் சின்னாபின்னப் படுத்தப்பட்டு, அவர்களுக்கிருந்த அனைத்து மத நம்பிக்கைகளும் இழந்து, தனிப்பட்ட வாழ்வில் வலுவிழந்த கதையெல்லாம் அறிந்து கொண்டு மனம் வேதனைப்பட்டேன்.

ஆனால் என் ஆழ்மனதில் ஒரு கவலை என்னவென்றால் நமக்கு இவரது தேவை சொற்ப நாட்களே. அதன் பின்னர் இவரது வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதே.



ஆர்வத்துடன் என் கள ஆய்வு மற்றும் மருந்து விற்பனை யில் உள்ள நெளிவு சுழிவுகள் பற்றி கொஞ்சமாக அவருக்கு ஒரு உற்சாகத்தை ஏற்படுத்தினேன்.

அவர் முதலில் நம்மிடம் எதிர்பார்த்தது 'பண உதவி'. அதை மறுத்து அவருக்கு முக்கிய தேவையான வேலைத்திறனை நான் போதித்தது பின்னாளில் அவரது வாழ்வையே முழுமையாக மாற்றியமைத்தது. ஆரம்ப நாட்களில் பண உதவி கிடைக் காமல் அவரால் உற்சாகக் குறைவை எதிர்கொள்ள நேர்ந்தது.

நண்பர்கள் வீட்டுத் திருமணம், விருந்து என செல்ல வேண்டிய போது அவருக்கு பணம் தேவைப்பட்டது. ஆனால் பின்னால் அதுவே மிகப் பெரிய சுமையாக அமையும் என அவருக்கு தெளிவிக்க வேண்டி இருந்தது. இது என் சொந்த வாழ்க்கைப் பாடம்.

நானும் முதன் முதலில் தினக்கூலியாக ரூபாய் 10 க்கு பெங்களூரில் வேலை செய்த நாட்களில் அரை வயிறு உண்டு மிகவும் சிக்கனமாக

கடன் வாங்காமல் காலம் தள்ளிய நாட்கள் கற்றுத் தந்த பாடம் 1979 80 இல், அந்த நாட்களில் மிகவும் இறுக்கமான நிலையிலும் ஒரு தகர டப்பாவில் 25 பைசாக்களை சேமிக்க கற்றுக் கொண்டேன். என்னை விட 5 10 மடங்கு சம்பாதித்தவர்களுக்கு அவசர உதவி எனது 'தகரடப்பா உண்டி' என்பதை நினைக்க இன்றைக்கும் பெருமையாக இருக்கிறது.

இன்னும் நானும் சுமார் 4 மாதங்களுக்கு அந்த நாட்டில் தங்கி, களப்பணி செய்து எனக்கு தேவையான வியாபாரக்கட்டமைப்பை மிக நல்ல முறையில் உருவாக்க சத்ய சாய் மஹராஜ் ஆசிர்வாதம் பரிபூரண மாய் உதவியது. ஏற்றுமதி வியாபாரம் என்ற போர்வையில் ஒரு நாடு விட்டு, மற்ற நாடு வந்து ஒரு வெற்றி நிறைந்த அனுபவம் என் வாழ்வில்.

ஏனென்றால் இந்த முயற்சியில் என்னுடனிருந்தது என்ன "அன்பு சாய்" மட்டுமே. அந்த சமயத்தில் தலைமையகம் திரும்ப வேண்டிய நிர்ப்பந்தம். அங்கேயும் வேலைகள் நிறைய காத்திருக்க என் ஏற்றுமதி ஒப்பந்தம் நல்லபடியாக முடிந்ததால் நான் விமான டிக்கெட்டை உறுதி செய்து கொண்டேன்.

நமக்கு வியாபார நிமித்தமாக கிடைத்த நண்பர்களிடமும் நம்முடன் வேலை செய்தவர்களிடமும் விடைபெறும் வேளை வந்தது. எமது டிரைவர் மற்றும் 'கேனன்' எனும் மொழிபெயர்பாளர். இருவரிடமும் கனத்த மனதுடன், அடுத்த சந்திப்பு பற்றிய உறுதியான எண்ணங்கள்



ஏதுமின்றி, அவர்களுடன் சேர்ந்து வேலை செய்ததை எண்ணிக்கொண்டு, இருவருக்கும் ஒரு தொகையை மட்டும் கை செலவிற்கு கொடுத்தேன்.

'கேனன்' அவருக்கு சத்ய சாயின் படத்தை காண்பித்து அவருக்காக ஒரு பிரார்த்தனை மட்டும் செய்து, அவரையும் அவர்கள் மதப்படி வேண்டிக் கொள்ள சொல்லிவிட்டு வெறும் வாய்சொல்லையே பெரு நம்பிக்கையாக அளித்துவிட்டு புறப்பட்டேன். என் மனம் உண்மையாய். வருந்தியது. என் புதிய வியாபார டிஸ்ட்ரிபூயூட்டரிடம் இருந்து எனக்கு சில தகவல்களை மட்டும் அனுப்ப வேண்டி கேனான் ஷமிதோவைக் கேட்டுக்கொண்டேன்.

எமது தலைமை அலுவலகத்தை அடைந்து பல வேலைகளுக்கிடையில் புதிதாகத் தொடங்கிய வியாபார முன்னேற்றம் குறித்து கேனனுடன்

விவாதித்தேன். மூன்று மாதங்கள் இங்கு வேலைகளைக் கவனித்து விட்டு மீண்டும் ஒருமுறை நேராகச் சென்று கண்காணிக்க வேண்டிய அவசியத்தை அலுவலகத்தில் விவாதித்தேன்.

பாக்கு (Baku) என்னும் தலைநகரமான அஜர்பைஜான் நாட்டிற்கு திரும்பினேன். எனது டிரைவர் 'ஹாசன்' விமான நிலையத்திற்கு வந்து அழைத்துச் சென்றார். அவரிடம் கேனன் பற்றி விபரம் கேட்டேன். அவர் சொன்ன தகவல் உண்மையிலேயே மகிழ்வை தந்தது. ஆம் நமது சத்ய சாய் பகவான் கேனன் வாழ்வில் ஒரு பிள்ளையார் சுழியைப் போட்டிருக்கிறார் என்பதே! அது.

எனது டிஸ்ட்ரிபூயூட்டர் கேனன் ஆங்கில அறிவை உபயோகிக்க முடிவு செய்தும் என்னை பற்றிய சில ரகசியமான தகவல்களை சேகரிக்கவும் (உளவு), அலுவலகத்தில் அவருக்கு வேலையை உறுதி செய்திருக்கிறார்கள் என்பதே! இதில் சாய்ராமுடைய ஆசிர்வாதமும் என்ன என்றால், அவர்கள் இருவரும் ஒரே நாட்டவர்கள்,

ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல, உறவினர்கள். அவர்கள் பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் சந்தித்து இருவரும் பயனடையும் வண்ணம் சத்ய சாய் பகவான் என்னை ஒரு கருவியாக்கி, எனது வாழ்வில் 'கேனன்' எனும் இளைஞனுக்கு கொடுத்த ஏற்றம் இன்றளவில் பார்க்கும் பொழுது வெறும் ஒரு சாதாரண வேலை மட்டுமன்று, அது ஒரு புது வாழ்வு, உயர்வு, மீண்டும் தொடர்வோம் சாய் வணக்கத்துடன்.

குரு வாழ்க!
குருவே துணை!!
எல்லாம் சாய்!
எல்லாமே சாய்!!

– தொடரும்.

அன்பே அற்புதம்!



தெரு நாய்கள் என்றால் மனிதன் முகம் சுழிக்கிறான்! மழைக்கு ஒரு தெருநாய் தனது வீட்டுக்குள் நுழைந்தால் கூட விரட்டி அடிக்கிறான்! ஆனால் அவனே தான் வழிபாட்டுத் தலத்திற்கு சென்று அன்பே சிவம் என்கிறான்! கண்களை இறுக்கமாக மூடி தனக்கு பக்தி இருப்பதாக காட்டிக் கொள்கிறான்! தான் ஒரு ஆன்மீகவாதி என்று சக மனிதரை நம்ப வைக்கிறான்!

மந்திரத்தை உச்சரித்து, சடங்குகளை அமர்க்களமாக செய்து விட்டாலே அது தான் ஆன்மீகம் என்று கற்பனை செய்கிறான்! அனைத்தும் அபத்தம்! பிற ஜீவன்கள் மேல் இரக்கப்படாத எந்த மனிதன் மேலும் பகவான் பாபா இரக்கப் படுவதே இல்லை!

பிற ஜீவராசிகளுக்கு செய்யும் தீங்கினால் மனிதனும் அடுத்த பிறவியில் வாயில்லா ஜீவராசியாக பிறந்து அல்லல் படுகிறான்! இப்படி அன்பே இல்லாத மனிதன் தான் தனக்கு பாபா ஏதாவது அற்புதத்தை செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறான்! "அன்பு தான் ஒரே அற்புதம்!" என்பதை அவன் கடைசி வரை உணர்வதும் இல்லை! பிற சீவராசிகளிடம் காட்டுவதும் இல்லை.

சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் சென்னை, பெரம்பூர், ஸ்ரீலஸ்ரீ மதன கோபால் சுவாமிகளை பற்றி அறிந்து கொள்வோம் வாருங்கள்.

ஸ்ரீலஸ்ரீ மதன கோபால் சுவாமிகள்

ஸ்ரீ மதனகோபால் சுவாமிகள் சென்னை பெரம்பூரை பூர்வீகமாகக் கொண்டவர். பெரம்பூர் மாணிக்க விநாயகர் கோவில் தெருவில் இவரது பெற்றோர் வாழ்ந்து வந்தனர்.

சுவாமிகளுடன் உடன் பிறந்தோர் இரு சகோதரர்கள். அனைவருக்கும் திருமணம் முடிந்து தனித்தனியாக வசித்து வந்தனர். சொத்துப் பிரட்சனை காரணமாக சகோதரர்களிடையே மனவருத்தம் ஏற்பட்டு 1970 ஆம் வருடம் தன் மனைவியுடன் வீட்டை விட்டு வெளியேறினார் நம் சுவாமிகள்.



சுவாமிகளுக்கு குழந்தைகள் இல்லை. மனைவியுடன் பெரம்பூர் தெருக்களிலேயே தங்கி வாழ்ந்து வந்தார். கால ஓட்டத்தில் மனைவி மறைந்துவிட, சுவாமிகள் பெரம்பூர் தெருக்களிலேயே வசிக்க ஆரம்பித் தார். பெரம்பூர் ரெயில் நிலையத்தில் சில காலம் வசித்து வந்தார்.

சுவாமிகள் அதிக நாட்கள், மேல்பட்டி

பொன்னப்பன் தெருவில் யார் வீட்டு திண்ணையிலாவது அமர்ந் திருப்பார். அவர் அந்தப்பகுதியைச் சேர்ந்தவர் என்பதால் யாரும் அவரை விரட்ட மாட்டார்கள்.

சுவாமிகள் வீட்டை விட்டு வெளியேறி யதில் இருந்து பித்துப்பிடித்தவர் போல் இருந்து வந்தார். யாரிடமும் பேசுவதில்லை. தெரிந்தவர்களிடமும் பேசுவதை தவிர்த்து வந்தார். காலப்போக்கில் தாடி மீசை வளர்ந்து சாமியார் தோற்றத்திற்கு மாறினார்.

சுவாமிகள் எங்கு சாப்பிடுகிறார்? எங்கு உறங்குகிறார் என்பது யாருக்கும் தெரியாது. சுவாமிகள் குளிப்பது இல்லை என்றாலும் முகம் மட்டும் ஒளி பொருந்தியதாக ஜொலித்தது. இவரைக்கண்ட மக்கள் பைத்தியம் என்றே ஏளனம் செய்தனர்.

சுவாமிகள் யாரிடமும் யாசகம் கேட்டதில்லை. குறிப்பறிந்த சிலர் அவருக்கு உணவு வழங்குவார்கள். சில நேரங்களில் மட்டும் உணவை ஏற்றுக்கொள்வார். கிடைத்த உணவில் பாதியை பைரவர்களுக்கு வழங்கிவிடுவார்.

இப்படியே 20 வருடங்கள் சென்ற பின்பு சிலரிடம் மட்டும் வாய் திறந்து பேச ஆரம்பித்தார். குளிக்காத இவரின் உடலில் இருந்து, விபூதி வாடையும், சந்தன வாடையும் அடிக்க ஆரம்பித்தது. இவர் யாரிடம் பேசினாரோ அவர்களது வாழ்க்கைப் பிரட்சனைகள் தீர ஆரம்பித்தது. அவர்கள் தங்களது



பிரச்சனையை கூறும் முன்பே இவரே பிரட்சனையைக் கூறி அதற்கு தீர்வும் கூறுவார். அவர்கூறியபடியே அனைத்தும் நடக்க ஆரம்பித்தது.


பல அன்பர்களுக்கு, தொழில் ரீதியாக வழிகாட்டியாக இருந்துள்ளார். அவர்கள் இன்று மிகப் பெரிய தொழிலதிபர்களாக உள்ளனர். அதேபோல் பலருடைய தீராத நோய்களையும் தீர்த்துள்ளார். காலப்போக்கில் சுவாமிகளின் மகிமையை உணர்ந்த மக்கள் அவரை மதன கோபால சுவாமிகள் என்று அழைக்க ஆரம்பித்தனர்.

கும்பகோணத்தைச் சேர்ந்த வரதராஜன் என்பவர் சுவாமிகளை சந்தித்து தனக்கு குழந்தை பாக்கியம் வேண்டும் என்று சுவாமிகளின் பாதத்தில்

விழுந்து கண்ணீர் விட்டிருக்கின்றார். சுவாமிகள் சிறிது நேரம் வானத்தைப் பார்த்துவிட்டு, உனக்கு குழந்தை பாக்கியம் நிச்சயம் உண்டு என ஆசி வழங்கியுள்ளார்.

சுவாமிகள் கூறியபடியே அடுத்த வருடமே குழந்தை பாக்கியம் பெற்ற வரதராஜன் சுவாமிகளை சந்தித்து நன்றி தெரிவித்திருக்கின்றார்.

2001 ஆம் ஆண்டுக்குப் பிறகு சுவாமிகள் பெரும்பாலும் பெரம்பூர் மேல்பட்டி பொன்னப்பன் தெருவிலேயே இருக்கத் தொடங்கினார். அங்குள்ள ஈஸ்வரி திருமண மண்டபத்திற்கு எதிரே சாலையருகே அமர்ந்திருப்பார். இன்றும் அவரது பக்தர்கள் ஈஸ்வரி திருமண மண்டபத்தில் வருடந்தோறும் குருபூஜை நடத்துகின்றார்கள்.



சுவாமிகளிடம் அனைத்து மதத்தினரும் ஆசிகள் வாங்கிச்செல்வர். தன்னை நாடிவரும் அனைவருக்கும் சாதி, மத பேதமில்லாது ஆசிவழங்குவார். அப்பகுதியை சேர்ந்த ஆட்டோ ஓட்டுனர்கள் சுவாமிகளிடம் ஆசி வாங்கிய பின்பே தங்களது பணியினை தொடர்வதை வாடிக்கையாக வைத்திருந்தனர்.

சுவாமிகளை சிலர் தங்களது இடத்திற்கு வந்து வசிக்கும்படியும், சிலரோ தனியாக குடில் அமைத்துத் தருவதாகக் கூறியும், சுவாமிகள் பிடிவாதமாக வேண்டாம் என்று கூறி, தான் வெட்டவெளியில் வாழ்வதையே விரும்புவதாகக் கூறிவிட்டார்.

அதுபோலவே கடைசிவரை சாலையின் ஓரத்திலேயே வாழ்ந்து 2006 ஆம் ஆண்டு மார்ச் 6 ந்தேதி, மேல்பட்டி பொன்னப்பன் தெருவில், தான் வழக்கமாக அமர்ந்திருக்கும் ஈஸ்வரி திருமண மண்டபத்தின் எதிரில், அமர்ந்த நிலையிலேயே தன் சீவனைப் பிரித்துக்கொண்டார்.

இவர் சித்தியடைந்த செய்தியை கேட்டவுடன் எங்கிருந்தோ, யோகிகளும், சாதுக்களும் பெருமளவில் திரண்டனராம். பெரம்பூரில் சுவாமிகளின் சீவ சமாதி அமைக்க இடம் கிடைக்காததினால், வியாசர்பாடி மயானத்தில் சித்தர்கள் முறைப்படி சீவசமாதி செய்விக்கப்பட்டது.

சுவாமிகள் ரோகிணி நட்சத்திரத்தில் சமாதி அடைந்ததால், மாதந்தோறும் அவர் சமாதி அடைந்த இடத்திலும், அவரது சமாதியிலும் அவரது பக்தர்கள் வழிபாடு நடத்தி வருகின்றார்கள்.

சித்தர்களின் சீவசமாதியை வழிபடுவோம்! கர்மவினை அகன்று கவலையின்றி வாழ்வோம்!

சீவசமாதி ஆலய முகவரி:

பி.பி.ரோடு மயான பூமி,
மேல்பட்டி பொன்னப்பன் தெரு,
வியாசர்பாடி, சென்னை 39. (பரம்பூர் பேரூந்து நிலைய பின்புறம்)

சித்தர் வாழ்ந்த இடம்:

ஸ்ரீ ஈஸ்வரி கல்யாண மண்டபம் எதிரில், மேல்பட்டி பொன்னப்பன் தெரு, வியாசர்பாடி, சென்னை 39.

பேரூந்து மார்க்கம்:

கோயம்பேடு – வியாசர்பாடி
கோயம்பேடு – பெரம்பூர்
பாரிமுனை – வியாசர்பாடி

இறங்கும் இடம்:

வடிவுடையம்மன் கோவில் பஸ் நிறுத்தம். ஞானோதயா பெண்கள் பள்ளி எதிரில்

ரயில் மார்க்கம்:

சென்னை கடற்கரை திருவள்ளூர்.
இறங்குமிடம்: பெரம்பூர்.

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai
Gpay: 6385129372

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு.பாலகிருஷ்ணன்.அண்ணாநகர் ரூ.3000.
பேபி.நட்சத்திரா. அயனாவரம். ரூ.3000.
திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம்.ரூ.2000.,
திரு.கோபால். மாதவரம். ரூ.1500.
திருமதி. மீரா வெங்கடேசன். ரூ. 1001.
திரு.சந்திரன். கொளத்தூர்.ரூ.1000.
செல்வி.ரம்யா. கொளத்தூர். ரூ.1000.
திரு.சதீஷ்குமார். சென்னை. ரூ.1000.
திரு.கேஸ்வர். ஈரோடு.ரூ.700.
திரு. கோபாலகிருஷ்ணன் கமலக்கண்ணன். ரூ.600.
திரு.நிதின் நாராயணன். ஹைதராபாத். ரூ.511.
திரு. முரளி சாய்ராம். திருநின்றவூர். ரூ.500.

திரு.எல்.காமராஜ். கோயம்பேடு. ரூ.500.
திருமதி.மகாலட்சுமி பொன்முருகன். மதுரை. ரூ.500.
திரு. வெங்கட்ராமன். பெங்களூர். ரூ.500.
திரு.தியாகராஜன். அயனாவரம். ரூ.500.
திரு.கோபால் சாய்ராம். விருகம்பாக்கம். சென்னை. ரூ.500.
திரு.நித்யானந்தம். திருநின்றவூர். ரூ.500.
திரு. சாய்கிருபா. வாடிப்பட்டி.ரூ.500.
திருமதி. நித்ராலட்சுமி. கோவை. ரூ.500.,
திருமதி. நித்யா ராஜேந்திரன் கூடுவாஞ்சேரி. ரூ.500.
திருமதி. இந்துமதி. அயனாவரம். ரூ.500.,
திருமதி. பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.
திருமதி. உமா விஜய்ஆனந்தன். அயனாவரம்.ரூ.400.
திருமதி.வரலட்சுமி பிரபாகரன். அயனாவரம்.ரூ.400.
திருமதி.லதாபாபு. வேப்பம்பட்டு. ரூ.300.,
திருமதி.என் பவித்ரா.கொளத்தூர். ரூ.300.
திருமதி. பிச்சையம்மாள். பெரம்பூர். ரூ.200.
திருமதி.சத்யா.செவ்வாய்பேட்டை. ரூ.200,
திரு.குமரன் ஸ்டோர்ஸ் டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட். கொளத்தூர். ரூ.200.,
திரு.விஜயன்.சி.சி.பி.பேங்க் மேனேஜர். ஓய்வு. கொளத்தூர்.ரூ.200.,
திரு. சந்திரசேகரன். பாண்டிச்சேரி. ரூ.200,
திருமதி. விஜயா. கொளத்தூர்.ரூ.200.,
திரு.கார்த்திகேயன் குடும்பத்தார். கதிர்.ரூ.200.
திரு.சூர்யா. கேபிள்.டி.வி. மாவுத்தன்பட்டி. ரூ.150.
திரு. வா.நிஷால். மாவுத்தன்பட்டி. ரூ.150.
திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.
திரு. பிரியா குடும்பத்தார். அயனாவரம்.ரூ.100.
திரு.ராமகிருஷ்ணன்.கொளத்தூர். ரூ.50.
திரு.அகஸ்டின் குடும்பத்தார். திருநீர்மலை. அரிசி 26 கி.
திருமதி. புவனா ஆதி. அயனாவரம். அரிசி 26 கி.

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* **5 வருச சந்தா - ரூ.1000 (தபால் செலவு உள்பட)**
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

* "பிரார்த்தனை செம்மல்" திரு.சாய் கலியன். சேலம்.ரூ.2000
* திரு.சந்திரமோகன். வக்கீல். குரோம்பேட்டை.ரூ.500.
* திரு. சாய்கிருபா. வாடிப்பட்டி.ரூ.500
* திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார். பெரம்பூர். ரூ.200.
* திரு.வேணுகோபால்.நங்கநல்லூர்.100.
* திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன்.நங்கநல்லூர்.ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.



எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

Sai maharaj Guruvaithedi -Tamil monthly - Registered with Registrar of Newspaper for India under no . TNTAM/2019/78281

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068